தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௯	பிரமோதூத, மாசி, பங்குனி	மலர்கள் ௧௧, ௧௨

பாண்டியர் வரலாறு.

திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப் பண்டிதர், கும்பகோணம்.

VI

கி. பி. 900 முதல் கி. பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்.

மூன்றாம் இராசசிம்ம பாண்டியன்:- இவ்வேந்தன் சடையவர்மன் பராந்தகனது புதல்வன். இவனது தாய் வானவன்மாதேவி என்பாள். இவன் கி. பி. 900 த்தில் பட்டம் எய்தினன் என்று ஆராய்ச்சி வல்லார் உரைக்கின்றனர். சின்னமனூர்ச் செப்பேடு இம்மன்னனது பதினாறாம் ஆண்டில் அளிக்கப்பெற்ற சாசனமாகும்.* இது பாண்டியரது வரலாற்றை ஆராய்வார்க்குப் பெரிதும் பயன்படுவதொன்றாம். தற்காலத்திற் சின்னமனூர் என்று வழங்கும் நற்செய்கைப்புத்தூர்க்கு மந்த்ர கௌரவ மங்கலம் எனப்பெயரிட்டு அதனை இவ்வரசன் பிரமதேயமாக அளித்த செய்தியை இச்செப்பேடு உணர்த்துகின்றது. அன்றியும், இவன் உலப்பிலிமங்கலத்தில் எதிர்த்த பகைஞர்களை

* South Indian Inscriptions Vol III. part IV. Ins No. 206.

வென்றமையும், கொடும்பாளூர் மன்னனது பெரும் படையைப் புறங்காட்டியோடச் செய்தமையும், வஞ்சிமாநகரில் போர்புரிந்தமையும் தஞ்சை மன்னனை நாவற்பதியில் தோல்வியுறச் செய்தமையும் இச்செப்பேட்டால் நன்கு அறியப்படுகின்றன. இவன், 'எண்ணிறந்த பிரமதேயமும், எண்ணிறந்த தேவதானமும், எண்ணிறந்த பள்ளிச்சந்தமும், எத்திசையும் இனிதியற்றி'ப் புகழ்பெற்றனன் என்பதும், இராசசிகாமணி, சிரீகாந்தன், மந்தரகௌரவமேரு முதலான பட்டங்களை யுடையவனாயிருந்தனன் என்பதும் ஈண்டு அறிந்துகொள்ளுதற்குரியனவாகும்.

இனி, சோழமண்டலத்தில் கி. பி. 907ல் முடிசூடிக்கொண்ட முதற் பராந்தகசோழன், அவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் 'மதுரை கொண்டகோப்பரகேசரி,' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளான். இதனால் இம் முதற்பராந்தக சோழன் கி. பி. 910ல் மூன்றாம் இராசசிம்மபாண்டியனோடு போர் புரிந்து அவனை வென்றிருக்க வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. தோல்வியுற்ற இராசசிம்ம பாண்டியன் இலங்கை மன்னனாகிய ஐந்தாம் காசிபனைத் தனக்குத் துணைப்படையனுப்புமாறு கேட்டுக்கொண்டனன். அவ்வேந்தனும் பாண்டியனது வேண்டுகோட்கு இணங்கித் தன் படைத் தலைவனிடம் சிறந்த யானைகளும், குதிரைகளும், வீரர்களும் அடங்கிய பெரும் படையொன்றை யனுப்பினான். இலங்கைப் படையும் பாண்டிப் படையும் ஒருங்கு சேர்ந்து முதற்பராந்தக் சோழனோடு போர் புரிதற்குப் புறப்பட்டன. வேளூர் என்னுமிடத்தில் பெரும் போர் நடைபெற்றது.* அவ்விரு படைகளும் பராந்தகனது படையுடன் போர்புரியும் ஆற்றலின்றிப் புறங்காட்டியோடத் தலைப்பட்டன. இராசசிம்மன் இம்முறையிலும் தோல்வியுற்றான். எனவே, பாண்டிநாடு பராந்தக சோழன் ஆட்சிக்குள்ளாயிற்று. இது நிகழ்ந்தது கி. பி. 919 ஆம் ஆண்டாகும்.

---

* S. I. I. Vol III. Inscription No. 99. இதில் குறிக்கப்பெற்றுள்ள வேளூர் எவ்விடத்தில் இருக்கின்றது என்பது தெரியவில்லை.

இச்செய்திகளுள் சில இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரச் செப்பேட்டிலும் சொல்லப்பட்டுள்ளன. *

தனக்குரிய நாட்டை இழந்த இராசசிம்ம பாண்டியனும் சிங்களத்திற்குச் சென்று அந்நாட்டரசனது உதவிபெறுமாறு அங்குத் தங்கியிருந்தனன்; தன் நாட்டைப்பெறுவதற்கு அவ்வேந்தன் உதவாமைகண்டு, அங்குத் தங்கியிருப்பதால் ஒரு பயனும் இல்லை என்பதை நன்குணர்ந்து, தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக்கிடைத்துள்ள சுந்தரமுடியை அம்மன்னனிடத்தில் வைத்துவிட்டு, தனது தாய் வானவன்மாதேவியின் பிறந்தகமாகிய கேரள நாட்டிற்குச் சென்று அங்கு வசித்து வந்தான். பின்னர் இவனைப்பற்றிய செய்திகள் புலப்படவில்லை. ஆகவே, பாண்டியரது ஆட்சி இம்மன்னன் காலத்தே தான் மிகவும் தாழ்ந்த நிலையை யடைந்து வீழ்ச்சி எய்திற்று. பாண்டி நாடும் சோழரது ஆளுகைக்குள்ளாயிற்று. திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் முதலான ஜில்லாக்களிலும் திருவாங்கூர் இராச்சியத்தின் சில பகுதிகளிலும் காணப்படும் முதற் பராந்தக சோழனது கல்வெட்டுகள் இவ்வுண்மைகளை நன்கு விளக்குங் கருவிகளாக உள்ளன.

வீரபாண்டியன் :—இவ்வேந்தன் இராசசிம்ம பாண்டியனது புதல்வன் என்று மதுரைஜில்லா திருப்புடைமருதூரிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. † இவனது கல்வெட்டுகள் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும் திருவாங்கூர் இராச்சியத்தின் தென்பகுதியிலும் உள்ளன. அன்றியும் இவனது ஆட்சியின் ஒன்பது பத்தாம் ஆண்டின் கல்வெட்டுகள் மதுரைஜில்லா திருமங்கலந்தாலுக்காவிலுள்ள கீழ்மாத்தூர்க் கோயிலிலும் காணப்படுகின்றன. ‡ இவற்றால், இவன் தனக்குரிய பாண்டிமண்டலத்தைச் சோழ மன்னர்களிடமிருந்து கைப்பற்றி ஆட்சிபுரிந்திருக்கவேண்டுமென்பது வெளியாகின்றது.

---

* South Indian Inscriptions Vol III. Inscription No. 65

† Inscription No. 128 of 1905

‡ Insrriptions 624 and 625 of 1926.

இவன் இங்ஙனம் பாண்டிமண்டலத்தைக் கைப்பற்றியது முதற் பராந்தக சோழனது ஆட்சியின் இறுதிக்காலத்திலாதல் அல்லது அவனது மகனாகிய கண்டராதித்த சோழனது ஆட்சியின் தொடக்கத்திலாதல் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அந்நாட்களில் இராட்டிர கூட மன்னனாகிய மூன்றாங் கிருஷ்ணதேவன் சோழ நாட்டின்மீது படையெடுத்துவந்து உள்நாட்டில் குழப்பம் உண்டு பண்ணியமையால், சோழமன்னர்கள் தம் ஆளுகையின் கீழ் வைத்துக்கொண்டிருந்த பாண்டி மண்டலத்தைப் பாதுகாக்க முடியாத நிலையில் இருந்தனர். காலங் கருதிக்கொண்டிருந்த வீர பாண்டியனும் முடிசூடிக்கொண்டு பாண்டிநாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். இதற்கேற்ப, முதற் பராந்தக சோழனுக்குப் பின்னர் அரசாண்ட கண்டராதித்தன், அரிஞ்சயன், இரண்டாம் பராந்தகன் முதலான சோழமன்னரது கல்வெட்டுகள், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலான ஜில்லாக்களில் காணப்படவில்லை. ஆனால் வீரபாண்டியனது கல்வெட்டுகள் மாத்திரம் அவ்விடங்களில் உள்ளன என்பது முன்னரே விளக்கப்பட்டது. எனவே, வீரபாண்டியன் பாண்டிநாட்டில் முடிமன்னனாக வீற்றிருந்து சோழமன்னர்க்குத் திறை செலுத்தாது அதனை ஆட்சிபுரிந்து வந்தனன் என்பது இனிது பெறப்படுகின்றது.

இனி, வீரபாண்டியனது கல்வெட்டுகளுள் பல, 'சோழன் தலைகொண்ட கோவீரபாண்டியற்கு ஆண்டு' * என்று தொடங்குகின்றமையின் ஒரு சோழ மன்னனை இவன் போரில் கொன்றிருத்தல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. முதற் பராந்தக சோழனுக்குப்பிறகு அரசாண்ட சோழமன்னருள் ஒருவனும் அவனது மகனுமாகிய அரிஞ்சயன் என்பான், தன் ஆட்சியின் தொடக்கத்தில் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று வீரபாண்டியனால் கொல்லப்பட்டிருத்தல் வேண்டுமென்பது உய்த்துணரப்படுகின்றது. ஆனால், வீரபாண்டியனால் கொல்லப்பட்டவன் இவ்வரிஞ்சயனது புதல்வனும் முதல் இராசராச சோழனது தந்தையுமாகிய சுந்தரசோழனாயிருத்தல்

---

* Travancore Archaeological Series Vol III part I.

வேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இன்னோரது கொள்கைக்குச் சில சான்றுகள் முரணாக உள்ளன. சுந்தர சோழனுக்குப் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' * என்னும் பெயருண்டு என்பது சில கல்வெட்டுகளால் அறியப் படுகின்றது. பொன் மாளிகை என்பது சோழ மன்னரது ஆட்சிக்காலங்களில் காஞ்சிமாநகரில் இருந்த அரண்மனைகளுள் ஒன்று. † ஆகவே, இச்சுந்தரசோழன் காஞ்சிமாநகரிலிருந்த தோர் அரண்மனையில் இறந்தனனேயன்றிப் போர்க்களத்தில் வீரபாண்டியனால் கொல்லப்படவில்லை.

அன்றியும் கி. பி. 964ல் சுந்தரசோழன் சேவூர் என்னும் இடத்தில் வீரபாண்டியனைப் போரில் வென்றான் என்று தெரிகிறது. ‡ தஞ்சை சில்லாவிலுள்ள சில கல்வெட்டுகள் இச்சோழ மன்னனைப் 'பாண்டியனைச்சுரம் இறக்கினபெருமாள்' என்று குறிப்பதும் இவன் வீரபாண்டியனோடு போர்புரிந்து அவனை வென்ற செய்தியையே வலியுறுத்துகின்றது. எனவே வீரபாண்டியன் சுந்தர சோழனைப் போரில் கொன்றனன் என்று கூறுவது எவ்வாற்றானும் பொருத்தமுடையதன்று.

இனி, அரிஞ்சயனது கல்வெட்டுகள் சோழநாட்டில் யாண்டுங் காணப்படாமையே, அவன் முடிசூடிய சில திங்களில் இறந்திருத்தல் வேண்டுமென்பதை உணர்த்துகின்றது. இவ்வரிஞ்சயனை நினைவுகூர்தருக்கு இவனது பெயரனாகிய முதல் இராசராச சோழன் மேற்பாடி என்னும் ஊரில் 'அரிஞ்சயேச்சுரம்' என்ற ஒரு கோயில் எடுப்பித்து அதற்கு நிபந்தங்களும் விட்டிருப்பது இவன் போரில் உயிர்துறந்த காரணம்பற்றியே போலும். இது தற்காலத்தில் சோழேச்சுரம் என்று வழங்குகின்றது. ஆகவே, வீரபாண்டியனால் கொல்லப்பட்ட சோழ மன்னன் முதல் இராசராச சோழனது பாட்டனாகிய அரிஞ்சயனேயாதல் வேண்டும்.

---

* South Indian Inscriptions Vol II. Ins No. 6 (p. p. 72 & 74)
† do. do. Vol III. Ins No. 142.
‡ Leaidan Grants of Rajarajachola I

இனி, சுந்தரசோழனது முதல்மகனும் அரிஞ்சயனது பெயரனுமாகிய ஆதித்தகரிகாலன் என்பான், 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி வர்மன்' * என்று பல கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருத்தலால் இவன் வீரபாண்டியனைப் போரில் கொன்றிருத்தல் வேண்டுமென்பது வெளியாகின்றது. அரிஞ்சயனது மனைவி, கொடும்பாளூர்க் குறுநில மன்னனாகிய தென்னவன் இளங்கோவேளது மகள் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது. † எனவே, வீரபாண்டியன் அரிஞ்சயனைக் கொன்ற காரணம்பற்றி ஆதித்தகரிகாலனும் கொடும்பாளூர் மன்னனும் ஒருங்குசேர்ந்து வீரபாண்டியனோடு போர்புரிந்து அவனைக் கொன்றிருத்தல் வேண்டுமென்பது திண்ணம். இந் நிகழ்ச்சி ஆதித்தகரிகாலனது இரண்டாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிககப்பெற்றிருத்தலால் வீரபாண்டியன் கி. பி. 972க்கு முன்னரே இறந்தனன்போலும்.

இவ்வீரபாண்டியற்குப் பின்னர், பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் ஆட்சிபுரிந்த பாணடியர்கள் சோழர்களுக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்களாக விருந்தமையின் அவர்களது வரலாற்றை அறிந்துகொள்ளுதற்குரிய கல்வெட்டுகள் பாணடிநாட்டில் கிடைக்கவில்லை. முதல் இராசராசசோழன் முதல் இராசாதிராச சோழன், முதலான சோழமன்னர்களது கல்வெட்டுகளில் அவர்களால் வென்றடக்கப் பெற்றவர்களாகக் குறிக்கப்பெற்றுள்ள பாணடியர்களது பெயர்கள் மாத்திரம் காணப்படுகின்றன. அத்தகைய பாண்டியரது வரலாற்றையும் அக்கல்வெட்டுகளின் துணைகொண்டு தொடர்பாக அறிய இயலவில்லை. இதுகாறும் ஆராய்ந்து கண்ட சில செய்திகளே அடியில் எழுதப்பெறுவன.

அமரபுயங்கன் :— இப்பாண்டியன் முதல் இராசராச சோழனால் வென்றடக்கப்பெற்றவன் என்று திருவாலங்காடுச்

* S. I. I Vol III Ins No. 14
† S. I. I Vol III Ins No. 96

செப்பேடு கூறுகின்றது. * இவ்வேந்தன் யாருடைய புதல்வன் என்பதும் எப்போது பட்டத்திற்கு வந்தனன் என்பதும் புலப்படவில்லை. முதல் இராசராசன் கி. பி. 995ல் பாண்டி நாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது பாண்டியனும் சேரனும் ஒருங்கு சேர்ந்து அவனை எதிர்த்தனர். அவன் அவ் விருவரையும் வென்று நாட்டைவிட்டு ஓடுமாறு செய்ததோடு அமையாது, பாண்டி நாட்டையும் சேர நாட்டையும் கைப்பற்றி, அவற்றிற்கு 'இராசராச மண்டலம்' என்று பெயரிட்டுத் தன் ஆட்சிக்குள்ளாக்கினன். அதுமுதல், இராசராசனுக்குப் 'பாண்டியகுலாசனி' என்ற பெயரும் வழங்குவதாயிற்று. இராசராசனது கல்வெட்டுகள் பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலும் உள்ளன. † இங்ஙனம் இராசராச சோழனால் பாண்டிநாட்டை விட்டு ஓடுமாறு செய்யப்பெற்றவன் இவ்வமரபுயங்க பாண்டியனே போலும்.

முதல் இராசராசசோழனது மகனாகிய முதல் இராசேந்திர சோழன் தன் ஆட்சியின் தொடக்கத்தில் தன் புதல்வர்களுள் ஒருவனுக்குச் 'சோழபாண்டியன்' என்ற பட்டமளித்துப் பாண்டி நாடாகிய இராசராச மண்டலத்திற்கு அரசப் பிரதிநிதி யாக மதுரையில் வீற்றிருந்து ஆண்டு வருமாறு ஏற்பாடு புரிந்தான். ‡ இவன் இங்ஙனம் செய்தமைக்குக் காரணம் தோல்வியுற்ற பாண்டியர் சிறிது வலிமை யெய்தியவுடன் சோழர்க்குத் திறை செலுத்தாது முரண்பட்டு வந்தமையேயாம். சோழ மன்னரது பிரதிநிதிகளாகச் 'சோழபாண்டியர்' என்ற பட்டத்தோடு மதுரையிலிருந்து ஆட்சி புரிந்தார், முதல் இராசேந்திரசோழனது மகன் சுந்தரசோழபாண்டியன், விக்கிரம சோழ பாண்டியன், பராக்கிரம சோழபாண்டியன் என்போர். ¶ இவர்களது கல்வெட்டுகள் பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும்

---

* S. I. I Vol III No. 205

† Inscription Nos. 2, 6, 7, 8 & 84 of 1927; Travancore Archaeological Series Vol. I, II, & III.

‡ South Indian Inscription Vol. III. No. 205.

¶ Annual Report on Epigraphy for 1916—1917.

காணப்படுகின்றன. எனவே, சோழபாண்டியரது ஆளுகை சேரநாட்டிலும் நிலைபெற்றிருந்ததென்பது நன்கு துணியப்படும்.

மானாபரணன், வீரகேரள பாண்டியன், சுந்தர பாண்டியன், விக்கிரம பாண்டியன், வீரபாண்டியன் :— இவர்கள் முதல் இராசாதிராசசோழன் காலத்தில் பாண்டி நாட்டிலிருந்த பாண்டி மன்னர்கள். சோழர்களால் அனுப்பப்பெற்ற அரசப்பிரதிநிதிகளுக்கு அடங்காது உள்நாட்டில் கலகம் விளைத்த காரணம்பற்றி இவர்களோடு இராசாதிராசசோழன் போர் நிகழ்த்துவது இன்றியமையாததாயிற்று. அப்போரில் மானாபரண பாண்டியனும் வீரகேரள பாண்டியனும் கொல்லப்பட்டனர்; சுந்தரபாண்டியன் தோற்றோடி முல்லையூரில் ஒளிந்துகொண்டான்; விக்கிரம பாண்டியன் ஈழமண்டலத்திற்கு ஓடிவிட்டான். வீரபாண்டியன் என்பான் இராசாதிராச சோழனால் கி. பி. 1048ல் கொல்லப்பட்டானென்று கோலார் ஜில்லாவில் மிண்டிக்கல் என்னுமிடத்திலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. * இச் செய்தி இராசாதிராச சோழனது திருக்களர்ச் செப்பேட்டிலும் குறிக்கப்பட்டுளது. † இங்குக் குறிக்கப்பெற்ற பாண்டியர் ஐவர் வரலாற்றையும் உணர்த்தக்கூடிய கருவிகள் கிடைக்கவில்லை.

சோழ நாட்டில் வீரராசேந்திர சோழன் இறந்த பின்னர் அதிராசேந்திரன் ஆட்சிபுரியும் நாட்களில், உள் நாட்டில் பெருங் கலகம் உண்டாயிற்று. அதில் அதிராசேந்திரன் கொல்லப்பட்டான். அக்காலத்திற் சோழ மண்டலம் பெருங்குழப்பத்திற்குள்ளாகி அரசனின்றி அல்லலுற்றிருந்தது. எனவே, சோழமன்னர்களது பிரதிநிதியாகப் பாண்டி மண்டலத்தில் ஆண்டு வந்த சோழ பாண்டியரது ஆட்சியும் அங்கு நடைபெறாமல் ஒழிந்தது. இச்சமயத்தில் பாண்டியர் ஐவரும் இழந்த நாட்டைக் கைப்பற்றி அமைதியுடன் கி. பி. 1084 வரை ஆண்டு வந்தனர்.

---

* Epigraphia Indica Vol. IV No. 31.

† South Indian Inscriptions Vol. III No. 208.

பிறகு, சோழமண்டலத்தின் அரசுரிமையை எய்தி அதன் முடிமன்னனாக வீற்றிருந்து ஆட்சிபுரியும் பெருமையடைந்த முதற் குலோத்துங்கசோழன் கி. பி. 1084ல் பாண்டி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அங்கு ஆண்டுகொண்டிருந்த பாண்டியர் ஐவரையும் போரில்வென்று அந்நாட்டைக்கைப்பற்றி அங்கு வெற்றித்தூண்களும் நிறுவினான். இச்செய்தி, முதற் குலோத்துங்க சோழனது மெய்க்கீர்த்தியில் நன்கு விளக்கப் பட்டிருப்பதோடு அவன்மீது சயங்கொண்டாரால் * பாடப் பெற்றுள்ள கலிங்கத்துப்பரணியிலும் கூறப்பட்டுளது. இங்ஙனம் முதற் குலோத்துங்க சோழன்பால் தோல்வியுற்ற பாண்டியர் ஐவரும் † யாவர் என்பது தற்காலத்திற் புலப்பட வில்லை. ஆயினும் சடையவர்மன் சீவல்லவன்என்பான் குலோத் துங்கன் காலத்திலிருந்த பாண்டியர் ஐவருள் ஒருவனாகவிருத்தல் கூடுமென்று ஆராய்ச்சி வல்லார் கருதுகின்றனர். ‡

மாரவர்மன் திரிபுவனச் சக்கிரவர்த்தி பராக்கிரம பாண்டியன்:- இவன் குலோத்துங்கன் காலத்திலிருந்த பாண்டியருள் ஒருவன் என்று தெரிகிறது. இவனைப்பற்றிய செய்திகள் கிடைக்க வில்லை.

சடையவர்மன் பராந்தக பாண்டியன்:—இவன் குலோத் துங்கசோழனது இறுதிக் காலத்திலும் விக்கிரம சோழனது ஆளுகையின் முற்பகுதியிலும் பாண்டி நாட்டிலிருந்தவன்.

---

* 'தன்பெருஞ் சேனை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருதப் போர்க்களத் தஞ்சி
வெரிகொடுத் தோடி அரணெனப் புக்கக்
காடறத் துடைத்து நாடடிப் படுத்து'

(குலோத்துங்கன் I மெய்க்கீர்த்தி)

† 'விட்ட தண்டெழ மீனவர் ஐவருங்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ

கலிங்கத்துப்பரணி—368.

‡ The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri.

இவன் பராக்கிரமனுக்கு எம்முறையினன் என்பது இதுபோது தெரியவில்லை. இவனுடைய மெய்க்கீர்த்தி குமரிமுனைக்கருகிலுள்ள பகவதி கோயிலில் உளது. அம் மெய்க்கீர்த்தியால் இவன் சேரமன்னனை வென்று திறைகொண்டதும், காந்தளூர்ச் சாலையில் கலம் அறுத்ததும், விழிஞம் என்ற நகரைக்கைப் பற்றியதும், தெலுங்கவீமனது தென்கலிங்க நாட்டைத் தன்னடிப்படுத்தியதும், அனந்தபுரத்தெம்பெருமானுக்கு மணிவிளக்குகள் பத்து அமைத்ததும், கூபகத்தரசன் மகளை மணந்து கொண்டதும், அளப்பனவும் நிறுப்பனவும் * ஆகிய கருவிகளில் கயல்முத்திரை பொறித்ததும் அறியப்படுகின்றன. இவன் வென்றதாகச் சொல்லப்பட்டுள்ள தெலுங்கவீமனை விக்கிரம சோழனும் வென்றான் என்று அவனது மெய்க்கீர்த்தி கூறுகின்றது. ஒரே காலத்திலிருந்த இவ்விரு வேந்தரும் ஒருங்கு சேர்ந்து தெலுங்கவீமனை வென்றிருத்தல் வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மாறவர்மன் சீவல்லபன்:—இவன் மேலே குறித்துள்ள பராந்தக பாண்டியனுக்கு என்ன முறையினன் என்பது புலப்படவில்லை. இவன் கி. பி. 1132ல் பட்டத்திற்கு வந்தவன். திருவாங்கூர் இராச்சியத்தையாண்ட வீரரவிவர்மன் என்பான் இவனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாக விருந்தனன். † இவ்வேந்தனது கல்வெட்டுகள் திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களில் உள்ளன.

சடையவர்மன் குலசேகர பாண்டியன்:—இவன் மாறவர்மன் சீவல்லபனது புதல்வன்; கி. பி. 1161ல் முடிசூடியவன். இவன் திருநெல்வேலியிலிருந்து பாண்டி நாட்டின் தென்பகுதியை ஆட்சி புரிந்துகொண்டிருக்கும் நாட்களில், பராக்கிரமபாண்டியன் என்பான் மதுரையிலிருந்து பாண்டி நாட்டின் வடபகுதியை ஆண்டு வந்தனன். இவ்விரு வேந்தர்களுக்கும் எக்காரணம் பற்றியோ பகைமையுண்டாயிற்று. குலசேகர பாண்டியன்

---

* தென் திருவாங்கூர் இராச்சியம்.

† The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri.

மதுரைமாநகர்மீது படையெடுத்துச் சென்று அதனை முற்றுகை யிட்டான். பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னனாகிய பராக்கிரமபாகுவைத் தனக்கு உதவிபுரியுமாறு பெரும் படை யொன்றனுப்ப வேண்டினன். அவ்வேந்தனும் இலங்காபுரித் தண்டநாயகன் தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பினன். அத்துணைப்படை பாண்டி நாட்டிற்கு வருவதற்குள் குலசேகர பாண்டியன் பராக்கிரம பாண்டியனையும் அவனது மனைவி மக்களையும் பிடித்துக் கொன்றுவிட்டான். * இலங்காபுரித் தண்டநாயகன் தன் படையுடன் பாண்டிநாட்டிற்குள் புகுந்து பல இடங்களிற் கொள்ளையிட்டு, குலசேகர பாண்டியனைப் புறங்காட்டியோடச் செய்தனன். இந்நிலையில் இலங்காபுரித் தண்டநாயகனுக்கு உதவிபுரியுமாறு சகத்விசய தண்டநாயகன் என்பான் இலங்கையிலிருந்து ஒரு பெரும் படையுடன் வந்து சேர்ந்தனன். இவ்விரு தலைவர்களும் குலசேகரனைப் போரில் வென்று அவனால் கொல்லப்பட்ட பராக்கிரம பாண்டியனது புதல்வனாகிய வீரபாண்டியற்கு மதுரையில் முடிசூட்டுவிழா நடத்தினர். போரில் தோல்வியுற்று மதுரைமா நகரை விட்டோடிய குலசேகர பாண்டியன் அக்காலில் சோழ மண்டலத்தில் ஆட்சி புரிந்துகொண்டிருந்த இரண்டாம் இராசாதி ராசசோழனைத் தனக்குதவிபுரியுமாறு வேண்டினன். அச் சோழ மன்னனும் பல்லவராயனை திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பியின் தலைமையில் பெரும்படையொன்றை யனுப்பினன். பல்லவராயன் பாண்டி நாட்டிற்குச் சென்று இலங்கைப்படையோடு போர்புரிந்து அதனைத் தோல்வி யுற்றோடுமாறு செய்து, பிறகு குலசேகரபாண்டியனைவருவித்துப் பாண்டி நாட்டை யாண்டு வரும்படி ஏற்பாடு செய்தான்.

இச் செய்திகள் காஞ்சிமா நகரையடுத்துள்ள ஆர்ப் பாக்கத்துக் கல்வெட்டிலும் இலங்கைச் சரித்திரமாகிய மகா வம்சத்திலும் கூறப்பட்டுள்ளன. † இவ்விரண்டிற்கும் சிற்சில வேறுபாடுகளும் உண்டு. அன்றியும், திருவாலங்காட்டிலுள்ள

---

* சோழவம்ச சரித்திரம். (காலஞ்சென்ற T.A. கோபிநாத ராயர்)

† Inscription No. 20 of 1899.

இரண்டாம் இராசாதிராச சோழனது 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டும் மாயூரத்திற்கு அண்மையிலுள்ள பல்லவராயன் பேட்டையிற் காணப்படும் அவனது 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டும் * இவ்வரலாற்றை நன்குணர்த்துகின்றன. இங்ஙனம் சோழ மன்னனது உதவியினால் பாண்டிய இராச்சியத்தைப்பெற்று ஆட்சி புரிந்துவந்த குலசேகர பாண்டியன் எத்தனை ஆண்டுகள் அரசாண்டனன் என்பது தெரியவில்லை; கி. பி. 1180 வரை ஆண்டிருத்தல் கூடுமென்று சிலர் கருதுகின்றனர்.

மாறவர்மன் விக்கிரம பாண்டியன்:—இவன் சடையவர்மன் குலசேகர பாண்டியனது மகன்; அவன் இறந்த பின்னர், பாண்டி நாட்டின் அரசுரிமை எய்தியவன். இவனது ஆளுகையின் தொடக்கத்தில், முன்னர்த் தோல்வியுற்றோடிய வீரபாண்டியன் சிங்களப்படையின் துணைகொண்டு மீண்டும் போர்புரியத் தொடங்கினான். இராசாதிராச சோழனுக்குப் பின்னர் முடிசூடிய மூன்றாங் குலோத்துங்கசோழன் இவ்விக்கிரமனுக்குத் துணைப்படை யனுப்பினான். இம் முறை நிகழ்ந்த போரிலும் சிங்களப்படை புறங்காட்டியோடவே, வீரபாண்டியன் தோல்வியுற்றான். சோழநாட்டுப் படைத்தலைவன் மதுரைமாநகரைக் கைப்பற்றி அங்கு வெற்றித்தூண் நிறுவினான். சோழர்க்குத் திறை செலுத்திவந்த இவ்விக்கிரம பாண்டியனிடம் இராச்சியத்தை ஒப்பித்து ஆண்டுவருமாறு செய்து அப்படைத் தலைவனும் சோழநாட்டிற்குத் திரும்பினான். இது கி. பி. 1182 ஆம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்திருத்தல்வேண்டும்.

வீரபாண்டியனும் மற்றும் ஒரு முறை மூன்றாம்குலோத்துங்க சோழனோடு நெட்டூரில் போர்புரிந்து தோல்வியுற்றுத் தன் சுற்றத்தாரோடு திருவாங்கூர் இராச்சியத்திற்கு ஓடிவிட்டான். † பிறகு இவனைப்பற்றிய செய்திகள் தெரியவில்லை. விக்கிரம பாண்டியன் சில ஆண்டுகள் அமைதியுடன் ஆட்சி புரிந்து கி. பி. 1190ஆம் ஆண்டில் இறந்தான். (தொடரும்)

* Inscription No. 433 of 1924.

† The Pandyan Kingdom by Mr. K. A. Neelakanta Sastri.

பரணர்.

(முற்றொடர்ச்சி 353-வது பக்கம்.)

திரு. வித்துவான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக் கலாசாலை, திருவத்திபுரம்.

முன்னைய கட்டுரைக்கண் நன்னனது வரலாற்றில் மிஞிலி யென்பானது வரலாறு சிறப்புமுறையில் வழங்குதலின், அதனைக் கூறுகின்றேம் என்றது நண்பர்கட்கு நினைவிருக்கும். அம் மிஞிலி யென்பவன் நன்னன் படைத்தலைவன். இவன் வினைசெயல்வகையில் வல்லனும் வினைத்தூய்மை யுடையவனு மாய் விளங்கினமை காரணமாக, நன்னன் தனது நகரங்களுள் பாரம், பிரம்பு முதலியவற்றையும் அவற்றைச் சூழ்ந்த நாட்டின் பகுதியையும் இவன் வசம் ஒப்பித்து ஆட்சிபுரியுமாறு விடுத்திருந்தான். இதனை நாம் முன்னரே கூறியுள்ளோம். மேலும், இவன் விற்பயிற்சி மிக்க வில்லேருழவர்களுட் டலைவ னாகவும் விளங்கினன் என்று,

"இறுகுபுல் மேய்ந்த வறுகோட்டு முற்றல்
அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை
வீளை யம்பின் வில்லோர் பெருமகன்
பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும்
பாரத் தன்ன ஆர மார்பு" (நற். 265) என

வரும் பரணர் பாட்டுக் கூறுகின்றது.

இங்ஙனம் புரவலர் விரும்பும் வின்மையும், வீரமும் படைத்த காளையாகிய இம் மிஞிலி தன் தலைவனை யொப்ப வள்ளன்மையும், "நெடுந்தேர் மிஞிலி" "ஒன்னார் ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை, அடுபோர் மிஞிலி" "இழையணி யானை இயல்தேர் மிஞிலி" எனப் புலவர் பாடும் புகழும் பெற்றி ருந்தான். "இகலடு கற்பின் மிஞிலி" எனக் கூறப்படுதலை

நோக்க இவன் வீரமேயன்றி, வீரமுடைமைக் கேற்ற கல்வியும் வல்லனா யிருந்தமை புலனாகின்றது. * இவ் வீரனை மகனாகப் பெற்ற பெரியோன் அன்னி யெனப்படுவா னவன். இது நோக்கியே, மிஞிலியும் அன்னிமிஞிலி யெனவும் கூறப்படுவா னாயினன். அது "கொடுங்குழை அன்னிமிஞிலியின் இயலும்" எனவும், அன்னிமிஞிலி போல" எனவும் ஆசிரியர் பரணரே கூறுமாற்றால் உணரப்படும்.

அன்னி யென்பான் சோழநாட்டில் வாழ்ந்த ஒரு சிறந்த வீரனாவான். அன்னிகுடி யென்னும் ஊர் ஒன்று தஞ்சை சில்லாவில் இருக்கின்றது. 'அதுவே, இவன் வாழ்ந்த வூராதல் கூடும் என்றும் சிலர் முடிபு செய்கின்றனர். இவன் காலத்தில் அழுந்தை யென்னும் ஊரில் திதியன் என்னும் வேளிர் மரபின னொருவனும் வைப்பு என்னும் ஊரில் எவ்வி யென்னும் வேளிர் மரபின னொருவனும் சிறப்புற் றிருந்தனர்.

திதியன் என்பான் மிக்க செல்வ முடையவன். மேலும், இவனுக்குப் பொதியில்மலை உரியதாயிருந்தது. அது பிறை யெயிற்றுக் கேழல் குழுமும் சாரலும், குறவர்க்குப் பெரும் பயன் தரும் தேனும், முயலுநர் முயற்சி முற்றற் காற்றாச் சிமையமும் கொண்டது. இது,

"உருமிசைக்
களிறுகண் கூடிய வாண்மயங்கு ஞாட்பின்
ஒளிறுவேற் றானைக் கடுந்தேர்த் திதியன்
வருபுனல் இழிதரு மரம்பயில் இறும்பிற்
பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் பன்றிக்
குறையார் கொடுவரி குழுமுஞ் சாரல்
அறையறு தீந்தேன் குறவர் அறுப்ப
முயலுநர் முற்றா வேற்றரு நெடுஞ்சிமைப்
புகலரும் பொதியில்" (அகம். 322) எனவரும்

---

* கற்பு என்பது இப்பொருட்டாதல் "தொலையாக் கற்பநின் நிலைகண்டிகுமே" எனவரும் பதிற்றுப்பத்தினுங் காண்க. இதனை யறியாது மிஞிலியைப் பெண்ணெனக் கருதி மயங்கினாருமுளர்.

பரணர் பாடலால் பெறப்படுகின்றது. மேலும் இவன் மிக்க போர்வன்மையும் வரையா வீகையும் உடையன் என்பதும், ஒரு காலத்துத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனொடு பொருத சிறப்புடையவன் என்பதும் முறையே,

"என்றும்
அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாண ரார்ப்பப் பல்கலம் உதவி
நாளவை யிருந்த நனைமகிழ்த் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்" (அகம். 331) என மாமூலனாரானும்,

"பொருநர்
செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலங்தேர்த் திதியன் (அகம்.25)

எனப் பூதப்பாண்டியனாலும்

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகல்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை" (அகம். 36)

என மதுரை நக்கீரராலும் கூறப்படுதலால் அறியப்படுவனவாம்.

எவ்வி என்பான் வேளிருள் ஒருவன். "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரில்லை" எனச் சுந்தரரால் திருமுறையிற் பாராட்டப்பெறும் பேறுபெற்ற பாரி யென்னும் வள்ளல் பிறந்த குடிக்கு முதல்வனானவன். இவனது நாடு மிழலைக்கூற்றம், முத்தூற்று முதலியவாம். இவனது சிறப்புப்

பின்னர்ப் பரணர் இவன்மீது பாடிய பாடலை ஆராயுங் காலத்துக் கூறப்படும்.

நிற்க, திதியனுடைய சிறந்த ஊர்களுள் ஒன்றான குறுக்கை யென்னும் ஊரின்கண் பெரிய அழகிய புன்னைமரமொன்றனைத் தனக்குக் காவல் மரமாகக் கொண்டு திதியன் பெரிதும் ஆர்வத்தோடு அதனை ஓம்பி வந்தனன். இதனைக் கண்ட அழுந்தூர் வாழும் அன்னி, இத் திதியன் தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியனால் தோல்வியுற்றதே இவனது வலியொடுக்கத்துக்குக் காட்டாகுமெனக் கருதி, அப் புன்னை மரத்தைத் தடிதற்கு எண்ணி, வைப்பூர் கிழவனை வேள் எவ்வியிடம் உசாவினன். அவன், சமயம் வரின் இடித்துரைத்துத் தக்கவழிச் செலச்செய்வது சால்புடையோர் செயலாதலின், திதியன் போர்வன்மை, படைவன்மை முதலிய வற்றை விளங்க வுரைத்து அவனை அம் முயற்சியை விட்டொழியுமாறு கூறினன். கூறினும் என்! அன்னி அடங்கானாய் அப்புன்னையைத் தடிந்து வீழ்த்தினன்.

இச் செய்தி யறிந்த திதியன் ஆறாச் சினங்கொண்டு பெரும் படையுடன் சென்று அன்னியைக் குறுக்கையிலே எதிர்த்து யாண்டும் குருதியாறு பெருகப் பெரும்போர் உடற்றி அன்னியைப் புறங்கண்டு தன் சிறப்பினை நிலை நிறுத்தினன். இவனது புன்னையின் வீழ்வு பல புலவர் பெருமக்களாலும் எடுத்துக் கூறப்பெற்றுளது. இச் செய்தி,

“ மலைமிசைச் தொடுத்த மலிந்துசெலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்டுறை தயங்கக்
கடல்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற் (று)
அறல்வார் நெடுங்கயத் தருநிலை கலங்க
மாவிருள் நடுநாள் போகித் தன்னையர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்
கவ்வாங் குந்தி யஞ்சொற் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்

சழங்குரற் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பிற் பல்வேல் எவ்வி
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவை கொல்லோ" (அகம். 126) எனவும்,

"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை" (அகம் 45) எனவும்,

"பெருஞ்சீர்
அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணர்ப் புன்னை போலக்
கடிநவைப் படீஇயர் மாதோ" (அகம் 145) எனவும்,

"அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத் தொழித்த
புன்னை விழுமம்" (நற். 180) எனவும் வரு

வனவற்றால் உணரப்படுகின்றது.

இங்ஙன், பொருதற்கரிய திதியனது புன்னையை வீழ்த்தி அவனுக்குப் புறமுங் கொடுத்தோடிய அன்னி பின்னர் வட வரும் வலியுள்ளவரும் ஆகிய கோசர் பலருடன் போர் தொடுத்தான். அவர்கள் இவனை வென்று இவனுடைய கண் களையும் களைந்தனர். இக் கோசர் திதியனது நாளவையிலும் படையிலும் இருந்து அவற்குப் பெரும்புகழ் தந்தோராவர்.

இவ்வாறு, தந்தையின் கண்களைக் கோசர் களைந்து திதிய னுக்குப் புகழ்விளைத்துக் கொடுத்தனர் என்ற செய்தி மிஞிலி யின் செவிக் கெட்டியது. அவன் மறவிய சினங்கொண்டு திதி யனை வெல்லுமாறு யாதெனச் சூழ்வானாயினன். தன்வலியும் மாற்றான் வலியுமாகிய இருவலியும் தூக்கித் தன்வலி குறை வாதல்கண்டு, ஒத்த வலியுடைய குறும்பியன் என்பானைத்

தனக்குத் துணைசெய்யுமாறு வேண்ட, அக் கொற்றக் குறும்பியன் மிஞிலியை நட்பினாற் றழுவி அக் கோசரை மரபோடழியக் கொன்றொழித்தான். அதுகாறும், மிஞிலி பரிகலத் துண்ணாமையும் படிவ மாறாமையும் வெள்ளாடை யுடாமையும் இருந்து, பின்னர்த் திதியன் இறந்த செய்தி கேட்டு, அவனது அழுந்தைக்கண், மிக்க ஆரவாரத்தோடு சென்று, பெருமிதங் கொள்வானாயினன். இதனால், இவன் தன் தந்தைக்குக் குற்றம் செய்தாரை ஒறுக்கும் ஆற்றிந்து ஒறுத்த செய்கையால் மிக்க மதிநுட்பமும் ஊராண்மையோடு கூடிய பேராண்மையும் உடையவன் என்பது தேற்றமாம். இச்செய்தி,

> " வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது
> ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
> கலத்து முண்ணான் வாலிது முடாஅன்
> சினத்திற் கொண்ட படிவ மாறான்
> மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
> செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர்
> இன்னுயிர் செகுப்பக் கண்டுசினம் மாறிய
> அன்னி மிஞிலி போல மெய்ம் மலிந்(து)
> ஆனா வுவகையே மாயினேம் "
>
> (அகம் 262) எனவும்,

> " தந்தை
> கண்கவின் அழித்ததன் தப்பற் றெருவர
> ஒன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரன் போகிய
> கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை
> அன்னி மிஞிலியின் இயலும் " (அகம் 196) எனவும்

வருவனவற்றால் காண்க.

நிற்க, வெளியம் என்னும் ஊரில் வேளிர் மரபில் ஆய் எயினன் என்பானொரு வீரன், சேரனது படைத்தலைவனாக விளங்கினன். இவன் மிக்க போர்வன்மையும் வள்ளன்மையும் உடையன் என்பது,

"யாம விரவின் நெடுங்கடை நின்று
தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின் வெண்கோட்(டு)
அண்ணல் யானை யீயும் வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்" எனவும், கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்" எனவும் வரும் பரணர் பாடல் களாற்றெரிகின்றது. சுருங்கக்கூறின், இவனது பகைக்கஞ்சி, அகுதை யென்னும் வீரனொருவன் அடங்கிக் கிடந்தான் என்பதே சாலுவதாம்.

இந்த ஆஅய்எயினன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேரவேந்தன் ஒருவனது படைத்தலைவனாயினன். இச்சேரல் ஆராத் திருவினையுடைய சேரலாதனுக்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி யென்பாளிடம் பகைவர் பனிப்பப் பிறந்து பலர்புகழ் பல்புகழ் வளர்த்தவன்; பிறர்க்கென வாழும் பெற்றியுடையவன். "ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மல்" எனவும், "தளங்குகுடி திருத்திய வளம்படு வென்றி" யுடையோன் எனவும், "வளர்த்தலை மயங்கிய பைதிரம் திருத்திய, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்" எனவும் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனாரால் பதிற்றுப்பத்தினுள் பாடப் பெற்றிருப்பதையும், அங்ஙனம் பாடிய புலவர்க்கு, "நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகங் கொடுத்தான் அக்கோ" என அப் பாட்டின் பதிகம் கூறுதலையும் நோக்கின், இவன் நிறைந்த கல்வி கேள்வியுடையவனாய்ப் பொருளிடங்களால் தளர்ச்சியுற்ற குடிகட்கு வேண்டுவன வுதவி யாதரித்தும், தன் காலத்துத் தளர்ச்சியுற்று வலிகுன்றிக் கிடந்த அரண்களைத் திருத்திச் செம்மை செய்தும் விளங்கினன் என்பது தோன்றுகிறது. இவன் மனைவி சிறந்த கற்புமேம்பாடுடையவள். அவள்

"வண்டுபட
ஒலிந்த கூந்தல் அறஞ்சால் கற்பின்
குழைக்கு விளக்காகிய ஒண்ணுதல் பொன்னின்
இழைக்கு விளக்காகிய அவ்வாங்கு உந்தி

விசும்பு வழங்கு மகளி ருள்ளும் சிறந்த
செம்மீன் அனையள்நின் தொன்னகர்ச் செல்வி ''

எனப் புகழப்பெறுகின்றாள். இவனுக்கும் நன்னனுக்கும் யாது காரணத்தாலோ பகைமை யுண்டாகி யிருந்தது. அதனால் இவனது படைத்தலைவனன் ஆஅய்எயினன், நன்னன் படைத் தலைவனை மிஞிலியோடு பொரலாயினன்.

இங்ஙனம், எயினன் மிஞிலியோடு போர்க்கெழுவதன் முன், சிலர் அவனுக்கு மிஞிலியின் மேம்பாட்டையும், அவன் துணை யால் நன்னன் அதிகன் என்பானுடைய புள்ளுநாட்டினைக் கடிந்த செய்தியையும் விளங்கக் கூறிப் போர்தொடுக்காவாறு தடுத்தனர். தடுத்தும், எயினன் நில்லாது மிஞிலியைப் பாழி யென்னும் பறந்தலையின்கண் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினன். அக்காலை, நன்னன் தன் பேய்க்கூட்டங்களின் இடையில் நின்று "அஞ்சாது நின்று போர் செய்க" என்று மிஞிலிக்குக் கட்டளையிட அதனைப் பணிவொடு ஏற்ற மிஞிலி எயினனைத் தாக்கிக் கொன்றொழித்தான். அதுபோது, நன்னன் போர்க்களத்தை நோக்கிச் சினஞ்சிறந்து அருள்பிறவாது நின்றான். உயிரிழந்துவீழ்ந்த ஆஅய்எயினன் மீது வெயில்படா வண்ணம் பறவைகள் தம் சிறகரால் மறைத்துச் சூழ்ந்தன. பின்னர் அவனது உரிமை மகளிர் இறுதிக்கடன் கழிப்பார் அவ்வெயினன் போலும் பாவை செய்து, அதனை முற்றவும் அணி செய்து, முக்கட்செல்வன் வீற்றிருக்கும் ஆலமுற்றம் போந்து, அம்முற்றத்தினையும் அழகுசெய்து அங்கு அப் பாவையை வைத்துத் தம் கடன் ஆற்றிப் பின்னர் நீரிற் போகட்டுத் தாமும் நீராடிப் போயினர். எயினன் இறந்த செய்திகேட்ட அகுதையும் அச்சம் நீங்கிவெளிவரலாயினன்.

இது, "கொடித்தேர்
பொலம்பூண் நன்னன் புள்ளுநாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற ஆஅய் எயினன்

இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்தன்
உயிர்கொடுத் தனனே சொல்லிய தமையாது"
(அகம் 396) எனவும்,

"முறையியல் வழாஅது ஆற்றிற் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி
யூட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி"
(அகம் 142) எனவும்,

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பக லுற்ற செருவிற் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங் (கு)
அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற் (று)
ஒண்கதிர் தெறுமைச் சிறகரிற் கோலி
நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
படுகளங் காண்டல் செல்லான் சினஞ்சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேண் மகளிர்
குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதைக் களைதந் தாங்கு" (அகம். 208) எனவும்,

"ஒன்னார்
ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற் குடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
வண்மை யெயினன் வீழ்ந்தென ஞாயிற்(று)
ஒண்கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர வாடி மொசிந்துடன்
பூவிரி யகன்றுறைக் கணைவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற் றயிர்கொண் டண்டி

யெக்க ரிட்ட குப்பை வெண்மணல்
வைப்பின் யாணர் வளங்கெழு வேந்தர்
ஞால நாறும் நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளிர்
கைசெய் பாவை துறைக்கண் இறுக்கும்"

(புகாஅர்) (அகம். 181)

எனவும் வருவனவற்றுல் உணர்க.

இவ்வாறு தன் படைத்தலைவன் மிஞிலியொடு பொருது உயிரிழந்தான் என்ற செய்தி களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் அறிந்ததும் பெருஞ்சினங் கொண்டு அம் மிஞிலியொடு அவனது தலைவனை நன்னனையும் கொன்று மீள்வேன் எனத் தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்து வஞ்சினங் கூறிப் போர்க்கெழுந்தனன். மேலும், இச் சேரனுக்கும் நன்னனுக்கும் இயற்கையிலே நாடாட்சி காரணமாகப் பகைமையும் இருந்ததென முன்னர்க் கூறினேமன்றே. அதுவும் இதுபோது இவன் போர்க்கெழுதற்கு ஏதுவாயிற்று. நார்முடிச்சேரல் போர்க்கெழும் செய்தி நன்னன் அறிந்து தானும் திரண்ட தானை சூழப் பெருங்கடல் நடுவட்செலும் வங்கம் போலச் செல்வானாயினன்.

இருபடையும் கடம்பின்பெருவாயில் என்னுமிடத்துக் கைகலந்து பொரலாயின. அதுபோது இருங்களிற்று யானைகள் கையும் மருப்பும் இழந்து பட்டன; தேர்கள் முறிந்து கொடிஞ்சியும் கொடியும் ஒருபுடை சிதறிவிழ உருளைகள் கழன்று துகளாயின; பெடையொடு கூடின பருந்தின் சேவல்கள் தம் மினத்தொடு போர்க்களம் புக்குக் குருதி படிந்து உண்டும், கொழுவிய தசை யருந்தியும், விசும்பகம் புதைய வட்ட மிட்டன; ஒரு பெயருடைய வீரர்பலர் பட்டமையான், அவர் தலை துமிந்து எஞ்சிய மெய்கள் எழுந்தாடின; அந்திமாலை விசும்பு கண்டன்ன அப் பறந்தலையின், உட்களத்தின் நடுவாகிய செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்திற் பேய் எழுந்து குரவையுங், துணங்கையும் ஆடின. சேரனும், மல்லல்

உள்ளமொடு, பகைவர், முன்பு செய்துவருகின்ற போரன்றிப் புதிதாகப் பகைத்துச் செய்யும், போர்வகை பலவும் கடந்து, செருவில் மிகுகின்ற மொய்ம்பினையுடைய மறவரொடு தலைச் சென்று, பணைதடியும் புனம்போல, அவர்தம் கை கால்களைத் தடிந்து, இரண்டு படையின் வாளும் தம்மிற் றெரியாமல் மயங்குதலால், பட்ட மாவும் மாக்களும் செய்த பிணங்களை யுண்டற்குப் போந்த எருவையும், அதன் சேவலும், குடுமி எழாலொடு, அம்பு, வாள் முதலிய படையுடன் குருதிச் செம்புனல் பிறவற்றையும் சுமந்து கிழக்கிழிய, உருவெழு கூளியர் உண்டு மகிழ்ந்தாடச் செருச்செய்து, நன்னனது காவல் மரமான பொன்படும் வாகைமரத்தின் முழுமுதல் தடிந்து, "குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்ப, அபரா வென்றி யெய்தினன். வெந்நிட் டோடிய நன்னன் மானத்தால் வலி குன்றி யிருந்தனன். பின்னர் அச்சேரல், அவன் வலிகுன்றி யிருத்த லறிந்து, தன் முன்னோரால் இழக்கப்பெற்று நன்னனது ஆட்சியின் கீழிருந்த நாட்டினை மீளப் பெறற்பொருட்டுப் பெரும் படை கொண்டு வாகைப்பெருந்துறை யென்னுமிடத்து அந் நன்னனை மீட்டும் எதிர்த்து இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான். நன்னனும் பொருது களத்தேயே ஒழிந்தான். இவ்விரு போர்களுள் முன்னதைப் பதிற்றுப்பத்து நான்காம் பத்தினுள் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார் ஒரோவிடத்தில் (40-ஆம் பாட்டினுள்),

"பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்" என்று

சிறப்பாகவும் ஏனைய விடங்களிற் பொதுவாகவும் கூறியுள்ளார்; பின்னது, ஆசிரியர் கல்லாடனாரால்,

"குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

இழந்த நாடு தந்தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலென்" (அகம். 190)

என்றும் கூறப்பட்டுளது.

இக் கல்லாடனார் 'பாட்டு நன்னன் நார்முடிச் சேரலால் பட்டொழிந்தான் என்ற செய்தியை வற்புறுத்துவதே யன்றிப் பதிற்றுப்பத்துக் கூறுவதனை நாட்டுவதாகத் தோன்றவில்லை. பதிற்றுப்பத்துக் பதிகத்தாலும் அதன் உரையாலும் இப் போர் கடம்பின் பெருவாயில் என்னுமிடத்து நிகழ்ந்த தென்பது அறியப்பட, இவ் வகப்பாட்டு இப் போர் வாகைப் பெருந்துறையென்னுமிடத்து நடந்ததெனக் கூறுகின்றது. மேலும், இதன்கட் காவல்மரந் தடிதலும் கூறப்பட்டிலது. இவற்றால் நன்னனுக்கும் நார்முடிச் சேரனுக்கும் நடந்தது ஒரே போர் அன்று என்பதுபெறப்படும். படவே, காப்பியனார் கூறிய போரின்கண் நன்னன் தன் காவன்மர மிழந்து புறங்கொடுத்து ஓடினன் என்பதும், கல்லாடனார் கூறிய போரின்கண் நன்னன் இறந்தான் என்பதும் முன்னது கடம்பின் பெருவாயில் என்னுமிடத்தும், பின்னது வாகைப் பெருந்துறை யென்னுமிடத்தும் நிகழ்ந்தன என்பதும் பெற்றாம்.

சிலர் நார்முடிச்சேரல் நன்னனைவென்று பெற்ற நாடுதான் இளமைக்காலத்தே இவனொடு பொருது இழந்த நாடு என்று கூறுகின்றனர். அது நன்னனது வெற்றிச் செயல்களுள் ஒன்றாதலால் அவனைப் பாராட்டிய புலவர்பெருமக்கள் அதனைக் குறியாதிரார். அத்தகைய குறிப்பொன்றும் இன்மையானும், அவன் கவர்ந்ததாகப் புள்ளிநாடு ஒன்றனைத் தவிரப் பிறிதொன்றும் கூறப்படாமையானும், தன் நாட்டையும் "முறையில் வழாஅது ஆற்றிற் பெற்" றானெனவே கூறப்படலானும், வேறு தக்க சான்று கூறினாலன்றி அது கோடற்பாலதன்றாம். இதனை இன்னும் விரித்து ஆராய்வதற்கு இஃதிடமன்று.

இவ் வகப்பாட்டில் வாகைக்குக் கொடுக்கப் பெற்றுள்ள அடைமொழியே பதிற்றுப்பத்தின் நான்காம்பத்தின் பதிகத்து நன்னனது காவன்மரமான வாகைக்கும் "பொன்படு வாகை

முழுமுதல் தடிந்து" என்புழி, "போன்படு" என்று கொடுக்கப் பட்டிருக்கும் ஒப்புமை நோக்கி, பெருந்துறை யென்னுமிடத்து நன்னன் தன் பொன்படுவாகையை யிழந்து பொருது களத்து ஒழிந்தான் என்று கொள்ளுவாரும் உண்டு. "இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்—பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய" என்றதற்கு வாகையாகிய காவல் மரத்தை யிழந்து, உயிரிழந்தான் என்று பொருள் கோடல் பொருத்தமாகத் தோன்றவில்லை. வருந்திப் பொருள்கோடலும் அழகன்று.

அஞ்சி.

இவன் அதியமான் நெடுமான் அஞ்சி எனப் பெயர் பெறுவான். "ஆர்கலி நறவின் அதியர் கோமான், போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி," "அதியர் கோமான்" என ஔவையார் கூறுதலை நோக்க, அதியர் என்பார் ஒருவகை மரபினர் என்பதும், அவர்கட்குத் தலைவன் இவன் என்பதும் விளங்குகின்றன. இவ் வதியர் என்பார் சிறந்த வீரர்கள் என்பது இவன் செயல்களால் தெரிகின்றது. மேலும், இவனது முன்னோர்கள் விண்ணுலகத்திலிருந்து இவ் வுலகத்திற்கு அமரரை வேண்டி ஆவுதி அருத்திப் பெறுதற்கரிய கரும்பினைக் கொண்டுவந்து விளைவித்த சிறப்பினை யுடையார். அது,

"அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பிவண் தந்தும்
நீரக விருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர்" (புறம். 99)

எனவும், "அந்தரத்து,

அரும்பெற லமிழ்தம் அன்ன
கரும்பிவண் தந்தோன் பெரும்பிறங் கடையே"
(புறம். 395)

எனவும் வரும் ஔவையார் பாடல்களால் விளங்குகின்றது. மேலும், இவர் இவனை நோக்கி,

" நீ, நின் முன்னோர் போல,
ஈகையங் கழற்கால் இரும்பனம் புடையல்
பூவார் காவிற் புனிற்றுப்புலால் நெடுவேல்
எழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்தியும் அமையாய் ". என்று

கூறுதாலும் இதன் உரையாலும்இவன் சேரமானுக்கு உறவின னென்றும், அதனால் இவனுக்குப் பனந்தார் உண்டென்றும், இவன் முன்னோர்களின் வேண்டுகோட்பொருட்டு வானோர் அவர்கட்கு வரங்கொடுத்தற்கு வந்திருந்த தொரு சோலையுடைய னென்றும் கூறுகின்றார்.

ஒரு காலத்து இவன் பெறுதற்கரியதும் உண்டாருயிர் நெடிதிருக்கச் செய்யும் சிறப்புடையதுமானதோர் நெல்லிக்கனி பெற்று, அதனைத் தானுண்ணாது ஔவைக்கு ஈந்தான். அது பெற்ற ஔவையார்,

வலம்படு வாய்வா ளேந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும! நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே." (புறம். 91) எனப்

புகழ்ந்து பாடுவா ராயினர்.

இவன் மிக்க போர்வன்மையும் புலவர்மாட்டுப் பேரன் புடைமையும் கொண்டு நன்மகப்பேறு பெற்றுச் சிறந்த புகழ் பெற்றவன். இவனிடத்தில் மழவர் என்னும் ஒருவகை வீரர்

பலர் இருந்து இவனுக்குப் பெரும் வெற்றியைப் பயந்தனர். இவை,

> " இருநிலம் மண்கொண்டு சிலைக்கும்
> பொருநரும் உளரோ நீகளம் புகினே "

எனவும், " ஒன்னார்

> " கடிமதி லரண்பல கடந்த
> நெடுமா னஞ்சிநீ அருளன் மாறே "

எனவும் வருவனவற்றாலும், ஔவை முதலிய அருந்தமிழ்ப் புலவர்பெருமக்களால் " ஆசா கெந்தை ", " என்னை " எனும் உரிமைச் சொற்களாற் கூறப்பெறுதலினாலும், " ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன் " " வழுவில் வன்கை மழவர் பெரு மகன் " என்பனவற்றாலும் உணரப்படுகின்றன. " அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது " என்றும் " அவன் மகன் பொகுட்டெழினியைப் பாடியது " என்றும் வருவன அவனது மக்கட்செல்வத்தை யுணர்த்துவனவாம்.

இவனுடைய ஊர் தகடூர் என்பது. மலை குதிரைமலை யென்பது. இவற்றைப் போல் அத்துணைச் சிறப்பில்லாத மலைகளும் ஊர்களும் பல. இத் தகடூரைப்பற்றிக் கூறுமிடத்து, ராவ்பகதூர் வி. வேங்கையர் அவர்கள் " வடமொழியில் தகடா என்று சொல்லப்பட்ட இந்தவூர் தமிழில் தகடூர் என்று வழங்கி வந்ததாகத் தோற்றுகின்றது; மைசூர் இராச்சியத்தில் தகடூர் என்று சொல்லப்பட்ட ஊர் ஒன்றிருக்கிறது " என்று எழுதுவதாக ஆசிரியர், மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள் கூறுகின்றார்கள். குதிரைமலையை ஆசிரியர்கள் " ஊரா தேந்திய குதிரைக் கூர்வேல், கூவிளங் கண்ணிக் கொடும் பூண் எழினி " என்றும் " நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி " என்றும், அதன் வளத்தை

> " அருவி யார்க்கும் கழைபயில் நனந்தலைக்
> கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தள்
> கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
> கடுங்கட் கேழல் உழுத பூழி

நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதிது உண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரை" (புறம். 168) எனவும்,

"மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்"
(அகம். 143) எனவும்

கூறுகின்றனர். தென்கன்டம் சில்லாவில் குதிரைமுக்குமலை யென ஒன்றிருப்பது இக்குதிரைமலை கொல்லோ என்றெண்ணச் செய்கின்றது.

இனி, இவனது போர்ச்செயல்களுட் கோவலூரெறிந்ததும் சேரமான் பெருஞ்சேர லிரும்பொறையுடன் போர்செய்ததும் புலவர் பெருமக்களால் மிகமிகப் பாராட்டப் பெறுகின்றன. இவற்றுட் கோவலூர் என்பது மலையமான் திருமுடிக்காரிக் குரியது. இது

"துஞ்சா முழவிற் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேர்யாற்று நுண்ணறல் கடுக்கும்
நெறியிருங் கதுப்பின் என்பேதைக்" (அகம். 35) என

வருதலால் விளங்குகின்றது. இக்காரி என்பான் வள்ளல் எழுவருள் ஒருவன். கபிலர் முதலிய நல்லிசைச் சான்றோரால் புகழப்பெற்றவன். மேலும், "முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி" என்று கூறப்பெறுதல் நோக்க, இவனுக்கு முள்ளூர் என்பதும் உரித்தெனத் தோன்றுகிறது.

இக்காரி, மலையன் என்றும் வழங்கப்பெறுவன்; விற்போரினும் ஈகையினும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனவன். இது,

"பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன்" (நற். 100) என்றும்,

"தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே" (புறம். 123)

என்றும் வருவனவற்றாலும் பிறவற்றாலும் உணரப்படும். ஒரு காலத்துச் சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் துப்பாகி வென்றிதந்து மிக்க புகழ் எய்தினன். சுருங்கக்கூறின், இவன் எத்துணை வலிமையுடையவனயிருப்பின் முடியுடை மூவேந்தரும் துணைவேண்டிப் பொருள் கொடுத்து வேண்டி நிற்பர். இன்றேல், ஆசிரியர் கபிலர்,

"வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நங்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவலர் அதுவே" (புறம். 122)

என்று கூறுவாரோ?

இங்ஙனம் முடியுடை மன்னராலும் புகழப்பெற்றுப் பெருங் கீர்த்தி கொண்டு விளங்கும் காரியைக்கண்ட அஞ்சி அக் கோவலூரை முற்றுகையிட்டுப் பொருதுவென்றான். இவ் வெற்றியைப் புகழ்ந்து கூறவந்த ஒளவையார்,

"செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி ஏந்திய தோளே" (புறம். 99) என்று

பாடுவாராயினர்.

இப்போரில் எதிர்க்கும் ஆற்றலின்றியும் முடியுடை வேந்தரின் துணையின்றியும் போகவே, காரி தோல்வியுற்றோடிப் பெருஞ்சேர லிரும்பொறையைத் துணைவேண்டினன்.

இவ்விரும்பொறை; "பொய்யில் ஸெல்வக்கடுங்கோவுக்கு வேளாவிக் கோமான் பதுமன்தேவி யீன்றமகன்." இவனது "வளனும் ஆண்மையும் கைவண்மையும் மாந்தர் அளவிறந்தன"; "கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது" வேள்வி பல வேட்டவன். "எண்ணியல் முற்றி ஈரறிவுபுரிந்து, சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும் காவற்கமைந்த அரசுதுறை போகிய வீறுசால் புதல்வனைப் பெற்றவன்; மன்னுள் வேந்தற்குக் கண்ணென வகுத்த நீதிநன்னூல் ஓதிய நாவினன்; மக்கட்கு நல்லறிவு கூறும் நல்லறிவினன். இது,

"வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலை பெயரக்
கூறினை பெருநின் படிமை யானே" (பதிற். 74)

என அரசில் கிழார் பாட்டினுல் விளங்குகின்றது. மேலும், அப்புலவர் பெருமகனார் இவனை, "இரும்புலி கொன்று பெருங் களிறு அடூஉம்—அரும்பொறி வயமான் அனையை" என்றும், அவன் எண்ணற்கரிய தேரும் மாவும் மாக்களும் யானையும் உடையன் என்றும், "உயிர்போற் றலையே செருவத் தானே" என்றும் கூறியதனுல் இவனதுபோர்வன்மை தெள்ளிதாகின்றது. இவனது கொடை முதலிய நல்லொழுக்கத்தை ஒருவன் அறிந்து கோடற்கு, "உரவோர் எண்ணினும் மடவோ ரெண்ணினும் பிறர்க்குநீ வாயின் அல்லது நினக்குப், பிறருவமம் ஆகா ஒரு பெரு வேந்தே" எனவும்,

"உயிர் போற் றலையே செருவத் தானே
கொடைபோற் றலையே இரவலர் நடுவண்
பெரியோர்ப் பேணிச் சிறியோரை யளித்தி
நின்வயிற் பிரிந்த நல்லிசை கனவினும்
பிறர்நசை யறியா வயங்குசெந் நாவிற்
படியோர்த் தேய்த்த வாண்மைத் தொடியோர்

தோளிடைக் குழைந்த கோதை மார்ப!
அனைய அளப்பருங் குரையை" (பதிற். 79)

எனவும் வருவனவே போதியனவாம்.

இப்பெருஞ் சேரலிரும்பொறைக்குத் தன் நாட்டின் ஒரு பகுதியிலிருந்த தேன்வளம் சிறந்த கொல்லிமலை நாட்டினையும் தான் அடைதல் வேண்டுமென்னும் வேட்கை மிகுதியு முண்டு. அதனால் அவன் தன்துணை வேண்டிப்போந்த காரியிடம் இவ் வேட்கையை யுணர்த்தவே, அவன் பெருஞ்சேனையுடன் அக் கொல்லியை யாண்ட வல்விலோரி என்பானை வென்று அதனைக் கைக்கொள்வான் சென்றான்.

வல்விலோரி கடை யெழுவள்ளல்களுள் ஒருவன். இவன் "வல்வில் ஓரி கொல்லிக் குடவரை", "ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி", "விடர்ச்சிமை ஓங்கருங் கொல்லிப் பொருந" "கொல்லி யாண்ட வல்வில் ஓரி" எனப் புகழப்படுதல் நோக்கி, கொல்லிமலையும் அதனைச் சார்ந்த நாடும் ஓரிக்கே யுரிய வென்பது பெறப்படும். "நாளும், இழையணி யானை இரப் போர்க் கீயும், சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை, அடுபோ ரானா ஆதனோரி" என ஆசிரியர் வன்பரணர் கூறுதலாலும், "நளிசினை, நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக், குறும் பொறை நன்னடு கோடியர்க் கீந்த, காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரியும்" என வள்ளல்க ளெழுவருள் ஒருவனாகப் பெரியோர்கள் கூறுதலாலும் இவனது வள்ளன்மையும் விளங்கு வதாகும். மேலும், இவன் ஆசிரியர் வன்பரணரைக் காட்டில் கண்டு, தான் இன்னானெனக் கூறாது நிற்ப, அவர் அவனை யுணர்ந்து பாடிய அளவில், அவன் தான்வேட்டையாடிக் கொன்ற மானின் தசையைத் தந்து உண்ணச்செய்து பின்னர்ப் பொன்னும் மணியும் மிகக் கொடுத்தனுப்பினன். இவனை "வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி" என்னும் புறப்பாட்டினுள் விரியக் காண்க.

இக்கூறிய வல்விலோரியும் திருமுடிக்காரியும் பெரும் போர் உடற்றியகாலை, ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும்

புதுவதன் முகலின், ஓரி அப்போர்க்களத்தே கொலையுண்டு இறந்தான். வென்றி கொண்ட அவனது கொல்லி நாட்டினைச் சேரனுக் கீந்த காரி அச்சேரனது துணையைப் பெற்றான். இது

> "முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
> செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
> ஓரிக் கொன்று சேரலற் கீத்த
> செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம் 209)

என வருவதால் உணரப்படுகின்றது. பேரிசையுடன் முள்ளூர்க் குரியனுய் அதன்கண் வந்து துவன்றிய ஆரியர் அலறத் தாக்கிப் பலரையும் கொன்று துரத்திய காரிக்கு, இஃதோர் அரிய செயலன்றன்றே! இவ்வுதவிக் கீடாகப் பெருஞ்சேரலிரும் பொறை தன் எண்ணி லடங்காச் சேனையுடன் அஞ்சியின் தகடூரை முற்றுகையிட்டுப் போர் தொடங்கினன். அப்போரின்கண் அதிகமான் தான் துணை வேண்டிய இரு பெருவேந்தர்கள் தாழ்த்து வந்தமையாலும், தன்னூரான் மிக்க திண்ணிதாகலின் பகைவர் எளிதிற் கைப்பற்ற லாகாதென் றெண்ணி அவர் அதனருகு வரும்வரை அகத்தேயிருந்து விட்டமையாலும், சேரனுல் வென்றி கொள்ளப்பட்டு உயிரிழந்தான்; துணை வந்த வேந்தரும் பின்னர்த் தோல்வியுற்றுத் தம் முரசும் குடையுமிழந்து ஓடினர். இச்செய்தி "ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடைத் அதிகமான் இருந்ததாம்" என நச்சினார்க்கினியரும், (தொல், பொருள், புறத், நச்சி, பக்கம் 189)

> "பல்பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
> வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
> வில்பயில் இறும்பின் தகடூர் நூறிப்
> பேஎ மன்ற பிறழநோக் கியவர்
> ஓடுறு கடுமுரண் துமியச் சென்று
> வெம்முனை தபுத்த காலை" (பதிற் 78) என அரசிச்

கிழாரும்,

“கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசை
பல்வேற் றானை அதிகமா னோடு
இருபெரு வேந்தரையும் உடன்நிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகளற் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேர லிரும்பொறை”

என அவர் பாடிய பத்தின் பதிகமும் கூறுவதனாற் பெறப் படுகின்றது.

பின்னர்க் காரி தன் கோவலூரைப் பெற்று இனிது வாழ்ந்து வந்தான்.

இவ்வதிகமானைப் பற்றிய ஆராய்ச்சி யொன்று புறநானூற்றின் பதிப்பில் திரு. ராவ்பகதூர் வி. வேங்கையரவர்களால் குறிக்கப் பெறுகின்றது. அதில் அதிகமான் அதிகன், அதிகைமான், அதியமான், அதியன் ஆகிய இவ்வைந்தும் சேர வமிசத்தைச் சேர்ந்த ஓராசனைக் குறிக்கும் ஒரு பொருட் பலபெய ரென்றும், போளூருக் கடுத்த திருமலை யென்ற சமணக் கிராமத்தி லுள்ள ஒரு கல்வெட்டால் அதிகைமான் அதிசன் என்று கூறப்பட்டுள்ள கேரள தேசத் தரச னொருவன் இருந்தா னென்பதும், அவனுக்கு இராச இராசனென்று மற்றொரு பெயருண் டென்பதும், அவன் வமிசத்தில் எழினி அல்லது யவனிகா என்ற ஓரரச னிருந்தா னென்பதும், இராச இராசனென்பா னுடைய மகனை விடுகா தழகிய பெருமாள், தகடா என்று சொல்லப்பட்ட ஊரை ஆண்டா னென்பதும் தெரிகின்றன என்றும் ஐயரவர்கள் கூறுகின்றார்கள். இனி, அத்திருமலைச் சாசனம், “சேர வமிசத்து அதிகைமானி எழினி செய்த தர்ம யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந் தருளுவித்து எறிமனியும் இட்டுக் கடப்பேரிக் (காலு)ங் கண்டு குடுத்தான் ஸ்ரீமத் கேரள பூப்ருதா யவநிகா நாம்நா ஸ்வதர்மாத்

மகா, துண்டீராஷ்வய மண்டலார்ஹஸ்ய கிரௌய சேஷஸ்வரௌகல்யிதௌ, பஸ்சாத்து குலபூஷணாதிக ந்ருப ஸ்ரீராஜராஜாத்மஜௌ வ்யாமுக்த சர்வஜ்ஞோஜ்வலேரே தகடாரே தேஜீர்ணோத்ரதௌ;' வஞ்சியர் குலபதி எழினி வகுத்த இயக்கர் இயக்கியரோ(டு)- எஞ்சிய் அழிவு திருத்தியிவ் வெண்குனை இறைதிரு மலைவைத்தான்- அஞ்சிதன் வழிவரும் 'அவன்வழி முதலிகல் அதிகன் * யவனிகன் நூல்- விஞ்சையர் தலம்புனை தகைமையர் காவலன் விடுகா தழகிய பெருமாளே" என்று கூறுகின்றது. இங்குக்கூறப்படும் தகடா என்பது தமிழில் தகடூர் என மருவியிருக்கும் என்றெண்ணி, அதுவே அதியமானுக்கு உரிய நகரா யிருந்த தென்றும், அது இதுபோது தர்மபுரி † என்று வழங்கப் பெறுகின்றது என்றும் சிலர் கூறுகின்றனர். இவற்றை நோக்க, அதிகமானது மரபு பெருஞ் சேரலொடு பொருது தகடூரை யிழந்த போதிலும் எஞ்சாது மீடித்து வந்த தென்பதும், அன்றி அதிகமானது சிறப்பு நோக்கியும் அவன்மகன் எழினியின் பெருமை நோக்கியும் தகடூரையாண்ட பிற்கால மன்னர்களும் அவர்தம் பெயரே தாமும் புனைந்து வந்தன ரென்பதும் அறியக் கிடக்கின்றன.

‡ஆய் அண்டிரன் :—

இவனும் ஆசிரியர் பரணரால் உலவாப் புகழ் தரப்பெற்ற உரவோருள் ஒருவனாவான். மோசி கீரனார் என்னும் புலவர்

* அச்சுப்பிரதியில் "அ் (தி) கனவகன் ... நூல்" என்றளது. அதை நனுகி நோக்குமிடத்து "யவனிகன் நூல்" என்றாகிக்கு முறையில் கிடக்கின்றது. S. I. I. Vol. I. p. 106.

† Journal of the Madras Geographical Association No. 2 & 3.

‡ "அண்டிரன் என்பது ஆந்திர னென்னும் தெலுங்கச் சொல்லின் திரிபாதலின் இவன் தெலுங்க நாட்டினன் எனவும், அகத்திய முனிவர் பதினெண்குடி வேளிரைக் கொணர்ந்தா ரென்றிருத்தலானே இவன் அவராற் கொண்வேரப்பட்ட வேளிர் மரபின னெனவுங் கூறுவர்." பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் நற்றிணை. பாடப்பட்டோர் வரலாறு. பக். 86.

பெருமானை மிக ஆதரித்து "மோசி பாடிய ஆயும்" எனப் பெருஞ் சித்திரனர் தந்த புகழைப் படைத்தவன். கடையெழு வள்ளல்களுள் ஒருவன். ஆஅய் எயினன் என்பான் வேறு; இவன் வேறு.

ஒருகாலத்து இவன் ஒரு பாம்பினிடம் நீலஉடை ஒன்று பெற்று ஆலின்கீழமர்ந்த சிவபெருமானுக்கு அதனை அளித்தான் என்பது

"நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆஅயும்" எனவரும் சிறு

பாணாற்றுப் படையால் அறியப்படுகின்றது.

"கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்" எனக் குறுந்தொகையிலும், புறத்திலும் வருதலையும், "வடதிசை யதுவே வான்றோய் இமயம், தென்றிசை ஆய்குடி யின்றாயிற், பிறழ்வது மன்னோஇம் மலர்தலை யுலகே" என வருதலையும் நோக்கின், தென்னாட்டில் உயர்ந்து விளங்கும் பொதியில்மலை இவனுக்கு உரித்தென்பதும் அதன்கீழுள்ள ஊர் ஆய்குடி என்பதும் தெரிகின்றன.

இவன் ஒரு காலத்துத் தன்னை எதிர்த்த கொங்கர்களைக் குடகடல்வரைத் துரத்தி வென்று பெருமை யெய்தினன் என்பது "கொங்கரைக், குடகட லோட்டிய ஞான்றைத், தலைப் பெயர்த் திட்ட வேலினும் பலவே" என்பதனல் தெரிகின்றது. அன்றியும் இவனது வீரமும், வீரர் பலருடைமையும், "அடிபல—மடமயில் ஒழித்த பீலி வார்ந்துதம்—சிலைமாண் வல்வில் சுற்றிப் பூலமாண், அம்புடைக் கையர் அரண்பல நூறி, நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன், சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய்" என வருதலால் விளங்குவனவாம்.

இவன் பிறர்க்கு ஈதலால் வரும் இன்பமே இன்பமாகக் கொண்டு செய்த கொடை, புலவர் பெருமக்களால் பலபடப்

பாராட்டப் பெறுகின்றது. "வல்லினும் வல்லா ராயினும் சென்றோர்க்குச்—சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும், மாஅல் யானை ஆஅய்" என்பதனால் இவன் சோறுபோடும் திறமும்,

"ஆஅய் அண்டிரன் அடுபோ ரண்ணல்
இரவலர்க் கீத்த யானையிற் கரவின்று
வான் மீன்பல பூப்பின் ஆனது
ஒருவழிக் கொருவழி யின்றிப்
பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே"

எனவும்,

"மழைக்கணம் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே"

எனவும் வருவனவற்றால் இவனது யானைக்கொடையும் விளங்குகின்றன. மேலும், யானைக் கொடைக்கண், இவன், தன்னையுள்ளி இரவலர் வரும்பொழுது அவர்க்குக் கொடுத்தல் கருதி யானைகளைத் தொகுத்து வைத்திருந்து கொடுப்பன் என நற்றிணையில், வியப்புடை, இரவலர் வருஉம் அளவை அண்டிரன், புரவெதிர்ந்து தொகுத்த யானை" என்பதனால் ஆசிரியர் காரிக்கண்ணனார் கூறுகின்றார்.

இவனது நாட்டில் கவிரம் என்னும் மலையுண்டென்றும், இவனது கானத்திற் செல்லும் வழியில், மூதூற்கண்ணே மிக வுயர்ந்த மலையொன் றுண்டென்றும், அப் பகுதிக்குத் தலையாறு என்பது பெயரென்றும், அம்மலையில் மூங்கில்கள் செறிந்திருந்தன என்றும் ஆசிரியர் பரணர் கூறுகின்றார்.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்றெண்ணும் அறவிலை பகரும் வாணிக னாதலின்றி, ஈதலின்பமே வெஃகிப் பெருங்கொடை செய்த இவ் வள்ளல் காலனென்னும் கண்ணிலி யுய்ப்ப மேலோர் உலகம் எய்தினன். இவன் வருகின்றனென்று, விசும்பின்கண், வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்

போர்ப்புறு முரசம் கறங்க, ஆர்ப்பெழுந்தது. மகளிர் பலர் உடன்கட்டை யேறினர்.

வேள் எவ்வி.

இவன், வள்ளல்களுள் மிக்க பாரி யென்பான் பிறந்த சீரிய குடிக்கு முதல்வன் என முன்னரே கூறினேம். "தாங்கா வுறையுள் நல்லூர் கெழீஇய, ஓம்பா வீகை மாவேள் எவ்வி, புனலம் புதவின் மிழலையொடு" என்றும், "பயங்கெழு வைப்பு" என்றும், "யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்" என்றும், 'புலம்பூண் எவ்வி நீழல் என்றும்' வருவனவற்றால், இவன் மிழலை நாடும், வைப்பு, நல்லூர், நீடூர், நீழல் முதலிய ஊர்களும் உடையன் என்பது விளங்குகின்றது. இவற்றுள், மிழலைநாடும், அந் நாட்டு நல்லூரும் "நெல்லரியும் இருந்தொழுவர்" என்று தொடங்கும் புறப்பாட்டினும், நீழல் என்னும் ஊர் "தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய" என்று தொடங்கும் அகப் பாட்டினும் விரியப் புகழப்பெற்றுள.

"பெரும்பூண், போரடு தானை எவ்வி மார்பின், எஃகுறு விழுப்புண் பல" என்று கூறப்படுதலையும், "பல்வேல் எவ்வி" "வாய்வாள் எவ்வி" என வருதலையும் நோக்கின், இவன் வில்வாட் பயிற்சி மிக்கோன் என்பதும், விழுப்புண் பல பெற்றமையான் இவனது பேராண்மையும் தெரியநிற்கின்றன. இவனது ஏவலை விரும்பி அடங்கிநில்லாத பகைவர் பலர் வன்மை யிழந்து * இவன் ஆணைவழி நிற்ப, அவர்தம் அரிமணவாயில் என்னும் உறத்தூரின்கண் பசும்பூண் பொருந்திலர் என்னும் ஒருவகை வீரர் கள்ளுணடு களிப்பெய்தினர் என்பது, பரணரால் அகத்தில்,

> "யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
> வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
> * நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்திலர் †

---

* நெடுமிடல் என்னும் பெயருள்ள வீரனொருவன் பதிற்றுப்பத்து எட்டாம் பத்தினுட் கூறப்படுகின்றான். † பொருந்தில் என்பது ஒரு ஊர். பொருந்தில் இளங்கீரனார் எனவருதல் காண்க.

அரிமண வாயில் உறத்தூர் ஆங்கட்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன
கவ்வை யாகின்று" (அகம். 266.) என்று கூறப்பட்டுள்ளது. இம் மேம்பாடு கருதித்தான் அன்னி யென்பான் திதியனொடு பொருதல் வேண்டி இவனொடு உசாவுவானாயினன். இச் செய்தி முன்னர்க் கூறினும்.

இது நிற்க, இவனது கொடை, எங்கும் பரவ நாற்றிசையினின்றும் இரவலர் பலர் இவனைப் பாடிப் புகழுவாராயினர். "எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்" என்றும், இரும்பாணொக்கல்" என்றும், "உலகுபுகத் திறந்த வாயில் பலரோடு உண்டல் மரீஇயோன்" "ஓம்பா ஈகை மாவேள் எவ்வி" என்றும் எழுந்த புகழ், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் முதலானோர்க்கு எட்டுதலும் அவர் இவன் மீது படைகொண்டு சென்று போர்உடற்றி வெற்றிபெற்றனர். இது,

ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்வில் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய" என ஆசிரியர் மாங்குடி கிழார் அந் நெடுஞ்செழியனைப் பாடிய பாட்டால் அறியப்படுகின்றது. இவன் நாட்டில் மீன்விற்கும் நுளைச்சியர் அம்மீனுக்கு மாறாக முத்தினைப்பெறுவர் என ஆசிரியர் நக்கீரர் கூறுகின்றார்.

போர்க்கண் இறந்துபட்ட எவ்வியின் மகளிர் கைம்மை நோற்றுச் செயலற்று வருந்தினர். அக் கையறுநிலை,

நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி அன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்

உலகுபுகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே" என்று வெள்ளெருக்கிலையார் என்னும் புலவரால் விளக்கப்பட்டிருக்கின்றது. இவன் பின்னர், கையற்றிரங்கிய புலவர் பாடல்கள் தொகை நூல்களுட் பல கிடைக்கின்றன.

நள்ளி :—

இவன் கண்டீரக் கோப் பெருநள்ளி யெனவும் வழங்கப் பெறுவன். இவன், "கரவாது, நட்டோ ருவப்ப நடைப்பரி காரம், முட்டாது கொடுத்தமுனைவிளங்கு தடக்கைத், துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாடன் நள்ளி" எனச் சிறுபாணாற்றிலும், "ஆர்வமுற்று, உள்ளி வருநர் உலைவு நனி தீரத், தள்ளா தீயும் தகைசால் வண்மைக், கொள்ளாரோட்டிய நள்ளி" எனப் புறத்திலும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனை வைத்துப் போற்றப்படுகின்றான்.

"இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்கு வகுத்தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளி" (புறம். 150) எனவும்,

"வல்வில் இளையர் பெருமகன் நள்ளி
சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்தள்" (அகம். 152) எனவும்,

"இரப்போர்க்கு
இழையணி நெடுந்தேர் களிறொடு டென்றும்
மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க்
கழல்தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி
நளிமுகை யுடைந்த நறுங்கார் அடுக்கத்துப்
போந்தை முழுமுதல் நிலைஇய காந்தள்" (அகம்.238)

எனவும் வரும் சான்றோர் பாடற் பகுதிகளால் இவன் தோட்டி என்னும் மலையும் அதனைச் சார்ந்த பிறமலைகளும் கொண்ட மலைநாட்டுத் தலைவன் என்பதும், அம்மலைகள் பளிங்கு போலுந்

தெள்ளிய வெள்ளிய தூய நீர்நிறைந்த அருவிகளும் சாரல்களில் செறிந்த காந்தளும் உடையனவாம் என்பதும், இவன் வில்லேந்திய வீரர் பலர்க்குத் தலைவனென்பதும், ஆர்வமுற்றுத் தன்னை யடையும் பாணர் முதலிய இரவலர்க்கு யானை, தேர், பொன் முதலியவற்றை நிரம்ப வளிப்பவனென்பதும் தோன்றுகின்றன. இவனை அகத்திற் பாடியவர் பரணரும் கபிலருமாவர். புறத்தில் வன்பரணர் தாம் சிறக்கப் பாடியுள்ளார். மேலும், வன்பரணரும், பரணரும் வேறு வேறுவர் என்று அறிஞர் கூறுகின்றார்கள். நள்ளி வன்பரணரை வரவேற்றுக் கொடைக் கடன் இறுக்கும் திறம் படிப்போர்க்குப் பேரின்பம் பயக்கின்றது.

ஒருகாலத்து வன்பரணர், வறுமை மிகுதியால், நள்ளியை யுள்ளித் தன் சுற்றம் சூழ்ந்துவர, கால்வருந்த நடந்து, அவனது கானத்தை யடைந்து, மேலும் நடக்கும் ஆற்றல் குன்றி ஓர் பலாமரத்தின் அடியிற் றங்கினர். இவர் உடுத்த உடையும் நல்லதின்றிக் கிழிந்திருந்தது. அது கண்டார்க்குக் கழியவும் வெறுப்பை விளைத்தது. அக்காலை குருதி தோய்ந்து சிவந்த வீரக்கழல் அணிந்த காலும் வெள்ளிய ஒளிவீசும் நீலமணி கிடந்து விளங்கும் உச்சியும் உடைய வல்வில் வீர னொருவன் அவரிடம் வந்தான். அவனுடைய நடையும் தோற்றமும் அவன் ஒரு சிறிய செல்வன் என்பதை நன்கு உணர்த்தின. உணர்ந்த புலவர் சட்டென்று அஞ்சலி பண்ணிக்கொண்டே எழுந்தனர். எழக்கண்ட அவன் அவரை எழாவண்ணம் கைகவித்து இருத்தி, தன்னோடு உடன்போந்த துணைவர் வருமுன்னரே, தன்கையிலிருந்த ஊன்தசையை யெடுத்து, ஒருபுறம் வைத்து, கடைகோலால் தீயுண்டாக்கி, அதன்கண் இத்தசையைச் சுட்டு அவர்க்கும் அவரது சுற்றத்திற்கும் வழங்கினன். ஆரப் பசித்தார்க்கு நீரும் பாலேயாம் என்றபடி அத் தசையை அமிழ்தென உண்டு, அருகோடும் அருவிநீர் பருகி, அடுபசி நீக்கியபின், அவனை நோக்கிப் புலவர் தம் சுற்றத்தோடு அவனிடம் விடைவேண்டினர். வேண்டவும், நள்ளி, "யான் காட்டுநாட்டில் வாழ்பவன் ஆதலால் பெருமை யமைந்த நல்ல அணிகலன்கள் எம்மிடத்து இவை தவிர இல்லை

யென்று கூறித் தன்மார்பிற் கிடந்த முத்துடவம் பூண்ட ஆரத்தையும் முன்கைக் கனிந்த கடகத்தையும் தந்தனன்.

பின்னர்ப் புலவர், இங்ஙனம் ஆற்று மக்கட்கு ஆற்றுந் துணையாகி விளங்கும் ஆண்டகை நள்ளியென் றறியாராய், அறிய விழைய பொழுது, அவன் நாடும் பேரும் கூறாது நீங்கினன். பின்னர், இவர் வழிவருவோரை வினவி உண்மை யறிந்து பெருமகிழ்ச்சி கொண்டு அவனைப் புகழுவாராயினர். இது அவராலேயே, புறநானூற்றில்,

"கூதிர்ப் பருந்தின் இருஞ்சிறகு அன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதல் பொருந்தித்
தன்னும் உள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி
மான்கணம் தொலைச்சிய குருதியம் கழற்கால்
வால்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றல்ஓர் வல்வில் வேட்டுவன்
தொழுதனன் எழுவேற் கைகவித்து இரீஇ
இழுதின் அன்ன வால்நிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே
தாம்வந் தெய்தா அளவை ஒய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பேர் ஒக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மரன் நளிய நறுந்தண் சாரல்
கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்தல் தொடங்கினேன் ஆக வல்லே
பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லை, காட்டுநாட் டேம்" என
மார்பிற் பூண்ட வயங்குகாழ் ஆரம்
மடைசெறி முன்கைக் கடகமொடு ஈத்தனன்
"எந்நா டோ?" என நாடும் சொல்லான்
"யாரீ ரோ?" எனப் பேரும் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளி எனவே,"

என்று விரித்துக் கூறப்பெற்றுளது. (தொடரும்)

தொல்காப்பியர் கல்விப்பெருமையும் நூலமைப்புத் திறனும்

['தொல்காப்பிய ஆராய்ச்சி'யினின்று எடுத்தது.]

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், ஈபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

தொல்காப்பியப் பாயிரமானது, தொல்காப்பியரைத் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தவர் என்றும், முந்துநூல் கண்டவர் என்றும், ஐந்திரம் நிறைந்தவர் என்றும் கூறுகின்றது. இவ்வாசிரியர்க்கு முன்பே தமிழில் (இலக்கண) நூல்கள் பல இருந்திருக்க வேண்டுமென்பது இவர் தாமே 'என்ப' என்றும், 'என்மனார் புலவர்' என்றும் இவ்வாறாகத் தொல்லாசிரியர் மதம்படப் பலவிடத்துங் கூறிச் செல்லுதலால் அறியப்படும். முந்துநூல் என்றது அகத்தியம் ஒன்றனையே யெனச் சிலர் கொண்டனர். அஃதொன்றேயாயின் ஓரிடத்தேனும் அதனை விதந்தோதாது, யாண்டும் 'என்மனார் புலவர்' என்றும், கடிநிலை யின்றே ஆசிரியர்க்க' என்றும் பொதுப்படக் கூறிச் செல்லாராகலின், இவர்க்கு முன்பே பலநூல்கள்' இருந்திருக்கவேண்டும் எனவும், அவற்றையே 'முந்துநூல்' எனப் பாயிரமும் கூறிற்றெனவும் கோடல் வேண்டும். முந்து நூலாவன அகத்தியமும், மாபுராணமும் பூதபுராணமும், இசை நுணுக்கமும் என நச்சினார்க்கினியரும் கூறினர். அப்பொழு திருந்தவை இன்னின்ன நூல்களென அறுதியிட்டுரைத்தல் சாலாதெனினும், அகத்தியம் உள்ளிட்ட பல நூல்கள் இருந்தன வென்பது தேற்றம். இவர் அவற்றையும், அற்றைநாள் வழக்குச் செய்யுட்களையும் நன்காராய்ந்தவர் எனப் பாயிரம் கூறுவதும் அவையனைத்தையும் முற்றவறிந்தவர் எனக் கருதற்குரிய குறிப்புக்கள் தொல்காப்பியத் திற் காணப்படுவதும் இவரது கல்வியின் அகலத்தையும் ஆழத்தையும் நன்கு புலப்படுத்துவனவாம். எடுத்துக்காட்டாகப் பின்வரும் குறிப்புக்கள் சில நோக்கற்பாலன.

மொழிமரபின் கண்ணே மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களை உணர்த்துமிடத்து 'உச்ச காரம் இருமொழிக் குரித்தே' என்னுஞ் சூத்திரத்தால் சகரவுகரத்தை ஈற்றிலுடைய முற்றியலுகரமொழி தமிழில் இரண்டே * உள்ளன என்றும்,

'உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயி னிலையும் பொருட்டா குமமே'

என்னுஞ் சூத்திரத்தால் பகரவுகரத்தை ஈற்றிலுடைய முற்றுகரமொழி ஒன்றே † யுண்டென்றும் அஃதொன்றுமே தன் வினைப் பொருளும் பிறவினைப் பொருளும் உடைத்தாமென்றும் கூறினர். பின்னும் நகரவொற்றை ஈறாகவுடைய சொல், உச்சகார மொழிபோல் இரண்டே ‡ என்றும், ஞகரவொற்றை யீறாகவுடைய சொல் உப்பகார மொழிபோல் ஒன்றே ¶ யென்றும், ஆனல் இஃது இருபொருட்படாதென்றும் கூறினர். மற்றும், நிலம் நிலன், கலம் கலன் என்பனபோல மகரத்தோடு மயங்குதலில்லாத னகரவீற்று அஃறிணைப் பெயர்ச்சொல் ஒன்பது $ உள்ளன வென்றும், தொகை மரபின்கண்ணே அளவுப் பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் முதலாகவுள்ளன கசதப நமவ அஉ என்னும் ஒன்பதெழுத்துமே என்றும் வரையறுத்துக் கூறியுள்ளார். இவைபோல்வனவும், உயிரும் புள்ளியும் இறுதியாகிய பலதிறப்பட்ட சொற்களையும் எஞ்சாதெடுத்து வருமொழியொடு புணர்த்துச் செய்கை செய்து முடிப்பதும், வேற்றுமைகளின் பொருள் விகற்பங்களையும் அவை மயங்கி வருமாற்றையும் மிக விரித்துரைப்பதும், இளமைப் பெயரும் ஆண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் ஆகிய மரபுப்பெயர்கள் பலவற்றையும் எடுத்து அவை இன்னின்னவற்றுக்கு உரியவென உணர்த்துவதும், பிறவும் தமிழ் வழக்குச் செய்யுட்களின் சொற்பொருட் பரப்பு முழுதும் இவ்வாசிரியரால்

---

* உசு, முசு. † தபு. ‡ வெரி, பொருந். ¶ உரிஞ். $ எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என்பன காட்டு.

நன்கு வடித்தறியப் பெற்றன என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி யெனத் தெள்ளிதின் விளக்குவன வாதல் காண்க.

இனி இவ்வாசிரியர் தாமே சூத்திரத்தியல்பெனக்கூறிய சில்வகை யெழுத்தின் செய்யுட்டாதலும் தன்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாதலும் போல்வனவெல்லாம் ஒருங்கமைந் தனவாகத் தொல்காப்பியச் சூத்திரங்கள் விளங்குவதும், அவற் றின்கண் சொற்கள் பொன்பணியாமாறு போல இவர் கருதிய வாறெல்லாம் திரிந்து அழகு செய்வதும் போல்வனவற்றை நோக்கின், இவர் வழிவழியாகத் தமிழிலே ஊறிவந்ததொரு குடியின்கட்டோன்றி, உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலையு மெல்லாம் தமிழாகவே கொண்டு வளர்ந்து தலைமை யெய்திய சான்றோராவர் என்பது விளங்கும்.

"முதலா வேன தம்பெயர் முதலும்"
"ஒவ்வு மற்றே நவ்வலங் கடையே"
"உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்"
"உப்ப காரமொடு ஞகாரையு மற்றே
அப்பொரு ளிரட்டா திவணை யான"

என்னும் சூத்திரங்களிலுள்ள முதலா, முதலும், அலங்கடை, சிவணும், ஞகாரை, இவணை என்னுஞ் சொல் வழக்குகளையும், இந்நூற் பாக்களின் திட்பநுட்பங்களையும் நோக்குமின்கள். இறையனார் களவியற் சூத்திரம் சிலவன்றி, நன்னூல் சின்னூல் தொன்னூல் முதலாய பிற்காலத்து எந்நூலின் கண்ணும் ஒரு சூத்திரந்தானும் இந் நூற்பாக்களின் அணிமையிலும் நிற்றற் குரியதன்றாயின் ஆசிரியர் தொல்காப்பியனாரது தமிழ்ப் புலமைமையின் விழுப்பத்தை எங்ஙனம் அளவிட்டுரைத்தல் கூடும்? இனி இவர் வடமொழியிலும் பெரும்புலமை வாய்ந்தவ ரென்பது 'ஐந்திரம் நிறைந்த தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி' என்னும் பாயிரக் கூற்றானே துணியப் படும்.

"அகத்தெழு வளியிசை யரிறப நாடி
அளபிற் கோட லந்தணர் மறைத்தே"

என இவர் கூறுவது அருமறையின் கண் இவருக்குள்ள பயிற்சியைப் புலப்படுத்தா நிற்கும்.

இனி, இவ்வாசிரியர் இந்நூலை அமைத்திருக்கும் திறப்பாடுகள் நோக்கற்பாலன. எழுத்தும் சொல்லும் பொருளுமாகிய மூன்றனையும் மூன்று அதிகாரத்தாற் கூறலுற்ற இவர், ஒவ்வோரதிகாரத்தையும் ஒன்பது ஒன்பது இயல்களாக வகுத்துக்கொண்டுளார். இங்ஙனம் ஒவ்வோரதிகாரமும் இயல் வகையால் ஓரளவினவாக வகுத்திருப்பது தாம் கூறக் கருதிய பொருள்களை ஒரெல்லையுள் அடக்க முயன்று இடர்ப்படுவதாகு மெனச் சிலர் கருதவுங்கூடும். எனினும் அவ்வியல்கள் யாவும் இன்றியமையாதனவும், அவ்வவ் வதிகாரங்களோடு இயை புள்ளனவுமாதல் நுண்ணறிவான் ஆராய்வார்க்குப் புலனாகா நிற்கும். ஆயின் ஓரதிகாரத்தை ஒன்பான் இயலிற் குறையவோ மிகவோ வகுத்தமைத்தல் ஒல்லாதோ எனின், அங்ஙனஞ் செய்தல் ஒல்லுமாயினும், ஒரு நிகரான வரையறை யுடைமை யின் பயன் கருதி அங்ஙனம் இயல்களை வரையறை செய்து, பொருளளவுக் கேற்பச் சூத்திரங்களை மிகுத்தும் குறைத்தும் இடர்ப்பாடின்றி யாத்தமைத்துள்ளா ரெனல்வேண்டும். பண்டை யாசிரியர்கள் தாம் கருதிய பொருள்களை எஞ்சாமற் கூறுவதில் நோக்குடையராயிருந்தமை போன்றே, அவை பிற் காலத்தில் திரிபின்றி நின்று நிலவவும், கற்போருள்ளத்தில் எளிதிற் புகுந்து அகலாதிருக்கவும் உரிய முறைகளை இயலுமளவு கைக்கொண்டு அவற்றைக் கூறும் கருத்துடையாரு மாவர். பாணினியும் தமது நூலின் எட்டு அத்தியாயங்களையும் நந்நான்கு பாதங்களாக வகுத்துள்ளனர். திருக்குறள், தேவாரம், திருவாய்மொழி முதலிய தமிழ்மறைகளும், ஆரிய வேதப்பகுதி யாகிய ஐதரேயப் பிராம்மணம் முதலியனவும், சங்கச் செய்யுட் களில் பதிற்றுப்பத்து முதலாயினவும் ஒவ்வோரளவினவாக இயன்றிருத்தலும் காண்க. இனி, இவ்வாசிரியர் மெய்ப்

பாட்டியலின்கண் எண்வகை மெய்ப்பாடும் நிகழுங் காரணங்களை உணர்த்துமிடத்து,

> " கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
> சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே "
> " செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
> றல்லல் நீத்த வுவகை நான்கே " .

என்றிங்ஙனம் ஒவ்வொரு மெய்ப்பாட்டுக்கும் நந்நான்கு காரணங் கூறுவதும், உவமவியலிலே வினை, பயன், மெய், உரு என்னும் நால்வகை உவமத்திற்கும் உருபுகள் தனித்தனி எவ்வெட்டாக வரையறுத்துரைப்பதும், பெயரியலிலே,

> " அவனிவன் உவனென வரூஉம் பெயரும்
> அவளிவள் உவளென வரூஉம் பெயரும்
> அவரிவர் உவரென வரூஉம் பெயரும்
> யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
> யாவன் யாவள் யாவ ரென்னும்
> ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
> பாலறி வந்த உயர்திணைப் பெயரே "

எனவும்,

> " அது இது உதுவென வரூஉம் பெயரும்
> அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
> அவை இவை உவையென வரூஉம் பெயரும்
> அவைமுத லாகிய வகரப் பெயரும்
> யாது யா யாவை என்னும் பெயரும்
> ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
> பாலறி வந்த அஃறிணைப் பெயரே "

எனவும் ஓரினமான மும்மூன்று பெயர்களை ஒவ்வோரடியில் நிறுத்தி அழகும் தெளிவும் பொருந்தக் கூறுவதும் போல்வன கற்போருள்ளத்தில் அவை நன்கு பதியுமாறு செய்ய மேற் கொண்ட முறைகளாம் என்க.

இனி, இலக்கண நூல்களில் பொதுவும் சிறப்பும் முதலிய விதிகள் ஒன்றனை யொன்று போற்றியும் மறுத்தும் செல்லும். இயல்பினவாகலின் இலக்கணங் கற்பார் நூலின் ஒரு பகுதி கற்று அமையாது நூன் முழுதுங் கற்கும் கடப்பாடுடையராவர். அக் கடப்பாட்டினின்றும் அவர் விலகாமைப் பொருட்டு இவர் நூற்பாக்களை அமைத்திருக்குந் திறன் மிக வியத்தற் குரியது. இருள் என்னுஞ் சொல் நின்று வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் வருமொழியோடு புணருமாறு கூறவந்தவர்

"இருளென் கிளவி வெயிலியல் நிலையும்"

என்றார். வெயில் என்னுஞ் சொற்கு அங்ஙனம் விதி கூறுமிடத்தோ

"வெயிலென் கிளவி மழையியல் நிலையும்"

என்றார். மற்று; மழை என்னுஞ் சொற்கு விதி கூறுங்கால்

"மழையென் கிளவி வளியியல் நிலையும்"

என்றார். வளி என்னுஞ் சொல்லுக்கு விதியும்

"வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப"

என அதற்கு முன்னுள்ள சூத்திரத்தோடு மாட்டெறிந்து கூறினர். அச்சூத்திரந்தான்

"பனியென வரூஉங் கால வேற்றுமைக்
கத்தும் இன்னும் சாரியை யாகும்"

என்பது. இங்ஙனம் உயிர்மயங்கியல் 39-ஆம் சூத்திரத்திற் கூறிய விதியை 161 சூத்திரங்கட்குப்பின் புள்ளிமயங்கியலிலுள்ள 'இருளென்கிழவி' என்னுஞ் சூத்திரங்காறும் தொடர்ந்துவரச் செய்திருத்தலின் இவையனைத்தையும் ஒருங்கு கற்றுணர்ந்தாலன்றி, இருள், வெயில், மழை, வளி என்னும் சொற்கள் அத்துச்சாரியை யாவது இன்சாரியையாவது பெற்று முடியும் என்பதனை எங்ஙனம் அறிதல் சாலும்? இவை வெவ்

வேறு உயிரும் புள்ளியும் இறுதியாகவுடைய சொற்களாதலின் இவற்றை ஒருவழிக் கொணர்ந்து ஒருங்கு முடித்தலும் பொருந்தாமை காண்க. இவ்வாறு முடிப்பன மற்றும் பலவுள. இங்ஙனம் சூத்திரங்களைக் கோவைப்படுத்தி முதலும் முடிவும் மாறுகோளின்றி இவ்வாசிரியர் அமைத்திருக்கும் முறையே உணரலாற்றாத சிலர் 'தொல்காப்பியத்துள் இச்சூத்திரம் ஈண்டிருத்தல் பொருந்தாது, ஆண்டு இருத்தல் வேண்டும்' என்று தமக்குத் தோற்றியவாறெல்லாம் உரைத்தல் நகை என்னும் மெய்ப்பாட்டிற்குக் கருவியாம் அத்துணையன்றி வேறென்பயனுடைத்து?

திருவள்ளுவர் திருக்குறள்

பாயிர ஆராய்ச்சி.

(துணர். 5-445-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள், B. A., B. L., தூத்துக்குடி.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இதன் பொருள்:—வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதானது (இல்லாத கடவுளது) அடிகளைச் சேர்ந்தவர்களுக்கு எவ்விடத்தும் துன்பங்கள் இலவாம் என்பதே.

'வேண்டுதல்' என்பதற்கு 'விரும்புதல்' எனவும், 'வேண்டாமை' என்பதற்கு 'வெறுத்தல்' எனவும் உரையாசிரியர்கள் பொருள் உரைத்துள்ளார்கள். வேண்டுதல் என்பதற்கு விரும்புதல் என்பதற்கு பொருளாயின், வேண்டாமை என்பதற்கு விரும்பாமை என்பதுதானே பொருள்? அது வெறுத்தல் என்று எவ்வாறு பொருள்படும்? விரும்பாமையும்

வெறுத்தலும் ஒன்றாகுமா? விரும்புதல், விரும்பாமை, வெறுத்தல் இம் மூன்றும் உள்ளத்தின் மூவகைத் தன்மைகள். விரும்புதல் அவாவுதல்; விரும்பாமை-அவாவாமை; வெறுத்தல்-காய்தல். விரும்பாமையாவது அவாவுதல் செய்யாதிருத்தல்; வெறுத்தலாவது அவாவுதற்கு எதிரான மனப்பான்மையைக் காட்டல். இவ்விரண்டும் ஒன்றாகா. விரும்புதல் தீது என்றால், வெறுத்தலும் தீதேயாம். விரும்பாமையோ தீதாகாது; நன்றேயாம். அதுபற்றியே நம் திருவள்ளுவநாயனாரும் "வேண்டாமை அன்ன விழுச்செல்வம்" எனவும், "அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்" எனவும், இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந் துன்பத்துட் டுன்பம் கெடின்" எனவும் கூறியுள்ளார்.

ஒரு பொருளை விரும்புங்கால் மற்றொரு பொருளை வெறுக்க நேரிடும். விரும்பாமையைக் கொண்டபோது விரும்புதலும், வெறுத்தலும் இல்லையாம். அதுபற்றியே திருவள்ளுவர் வேண்டாமையைமட்டும் கூறி வெறுத்தலைக் கூறாது போந்தனர். வேண்டாமையை விழுச்செல்வம் என அவர் கூறியதற்குக் காரணமும் அஃதே.

வேண்டாமையை ஓரிடத்தில் உயர்த்திக்கூறிய திருவள்ளுவர் அதனை இங்குத் தாழ்த்திக் கூறுவரா? விருப்பையும் வெறுப்பையும் இங்குக் கூறவிரும்பின், 'விருப்பு வெறுப்பிரண்டுமில்லான்' என்று கூறமாட்டார்? அவ்வாறு கூறத் தெரியாதார் கூற்றன்றோ "வேண்டுதல்வேண் டாமை யிலான்" என்பது? வேண்டுதல்வேண்' என்பதை முதற்சீராகக் கொண்டாலல்லாமல் தளைகட்டும்படியான இக்குறளைத் திருவள்ளுவர் வாக்கென்று யாரே கூறுவர்?

இனி, விருப்பு வெறுப்பு இல்லாதிருத்தல் கடவுளது இலக்கணமா? துறவியின் இலக்கணமா? கடவுள் ஒரு கண்டப் பொருளாய் ஓர் இடத்தும், மற்றைப் பொருள்கள் பலகண்டப் பொருள்களாய் வெவ்வேறு இடங்களிலும் உள்ளபோதன்றோ கடவுளுக்கு விருப்பும் வெறுப்பும் உளவாதல் கூடும்? கடவுள் ஓர் அகண்டப் பொருளாய்த் தமக்கு வேறாக ஒரு பொருளும்

இல்லாது விளங்குங்கால், அவருக்கு விருப்பு வெறுப்பு உள வாதல் எங்ஙனம்? அவை கடவுள்பால் உளவாதலே நிகழாத போது, அவை இல்லாதான் என்று கூறுதல் பொருத்தமா? விருப்பு வெறுப்பு இல்லாதான் துறவியே யாவன். என்னை? அவை அவன்பால் முன்னர் இருந்து பின்னர் இல்லாது போனபடியால். இதனால், "வேண்டுதல்வேண் டாமை யிலான்" என்பது முற்றத்துறந்த ஒரு முனிவனையே கடவுளெனக் கொண்டு வணங்கும் ஒரு மதத்தினனது கூற்றென்பது வெள்ளிடைமலை.

கடவுளுக்கு அடிகள் உள்ளனபோலவும், அவற்றை அன்பர்கள் சேர்தல்போலவும் கூறுதலினது ஒவ்வாத்தன்மையை மூன்றும் குறளின் கீழ்க் காட்டியுள்ளேன். அஃது இக்குறட்கும் அவ்வாறு கூறும் இவ்வதிகாரத்தின் ஏனைய குறள்களுக்கும் பொருந்தும்.

'யாண்டும்' என்பதற்கு 'எவ்விடத்தும்' அல்லது 'எக்காலத்தும்' என்பதுதான் ஈண்டு உரைக்கத்தக்க பொருள். கடவுளைச் சேர்ந்த முத்தர் கடவுளோடு கலந்து நிற்றலன்றி வேறாக நிற்றல் உண்டோ? அவர் தேசகாலங்களைக் கடந்து நிற்கும் கடவுளோடு ஐக்கியமான பின்னர், அவருக்கு எவ்விடத்தும் அல்லது எக்காலத்தும் துன்பங்கள் இல என்று சொல்லுதல் கடவுளோடு கலந்த முத்தர் கடவுளைவிட்டுச் சில காலம் பிரிந்திருத்தலும் சிலகாலம் வேறு இடங்களுக்குச் செல்லுதலும் நேருமென்று நினைத்தற்கு இடம் தருமன்றோ? அவ்வாறு நினைத்தற்கு இடந்தரும்படியாகப் பாவியற்றல் போலிப் புலவரது செயலேயாம். நம் மெய்ப்புலவரது செயலென்று கூறுதல் ஒரு பெரும் பாவமாகும்.

"இல" என்று பன்மையில் பயனிலை நிற்பதால், "இடும்பை" என்ற எழுவாய்க்கு 'இடும்பைகள்' எனப் பொருளுரைக்க வேண்டுவதாயிற்று. (சில அல்லது பல) இடும்பைகள் இல என்று கூறுங்கால், ஓர் இடும்பை உளதோ என்றொரு வினா எழக்கூடுமே. 'இடும்பை இலை அல்லது இடும்பை இலது'

என்று கூறினல் அவ்வினவின் எழுச்சிக்கும் இடம் இல்லாமற் போமன்றே?

இவ்வாறு சொல்லினும் பொருளினும் பிழைபாடுள்ள இப்பாவினை நம் திருவள்ளுவர் கூறினர் என்றல் அவரது பெருமையைக் குறைத்துக் கூறுதலேயாம்.

ஐந்தாம் குறள்

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இக்குறட்குத் தடைவிடைகள் எழாதவண்ணம் பொருளுரைத்தல் எவ்வுரையாசிரியர்க்கும் முடியாததென்று சொல்லும் தன்மையில் இக்குறள் அமைந்துள்ளது. ஆதலால், இக்குறளின் உரையினைக் கொண்டு இக்குறளின் பொருட்பொருத்தமின்மையை எடுத்துக் காட்டி இக்குறட்குக் குற்றம் கூறுங்கால், உரையாசிரியரின் கல்வித்திறமையை யான் குறைத்துக்கூறியதாக எண்ணலாகாது.

இக்குறட்குப் பரிமேலழகருரை :—மயக்கத்தைப்பற்றிவரும் நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினையும் உளவாகா, இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழை விரும்பினாரிடத்து.

மணக்குடவருரை :—மயக்கத்தைச்சேர்ந்த நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினைகளும் சேரா. தலைவனாகிய மெய்ப்பொருள்சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினர் மாட்டு.

நச்சருரை :—அஞ்ஞானம்பற்றி எழாநின்ற இருவினைகளும் மெய்த்தன்மைவாய்ந்த சிவபிரானது திருப்புகழைப் பாராட்டுவாரிடத்துச் சேரா.

தாமத்தருரை :—அஞ்ஞானத்தால் உண்டாகும் நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினைகளும் சேரமாட்டா, மெய்த்தன்மை பொருந்திய கடவுளுடைய புகழை விரும்பி (த்தோத்திரம்பண்ணி) னாரிடத்து.

தருமருரை :—(தம் அறியாமையாகின்ற) இருள் காரணமாக வந்து இயைகின்ற (நல்வினை தீவினைகளும் என்னும்) இரண்டு வினைகளும் சேரா, அவ்விறைவனைப் பெற்ற உபதேசப் பொருளோடு பொருந்திய புகழ் தங்கி நின்றவரிடத்து.

வீரமாமுனிவருரை :—கடவுளாகிய மெய்ப்பொருளை அடைந்தான் என்கிற புகழை விரும்பினவரிடத்திலே (இச்சைகள் பண்ணுவிக்கிற) மயக்கத்தினால் வருகிற நல்வினை தீவினைக் கலப்புகள் உண்டாகா (நல்வினையே உண்டாகும்).

இவ்வறுவர் உரைகளும் இக்குறளாகிய வெள்ளரிப்பழத்திற்கு இவ்வறுவரும் கட்டிய இருப்புப் பூண்களாம். இவ்வறுவரும் கட்டிய இருப்புப் பூண்களாலும் இக்குறள் உடைபடாது நிற்கும் ஆற்றல் இலது. அஞ்ஞானம், அறியாமை, மயக்கம் என்பவையெல்லாம் ஈண்டு ஒரு பொருள் குறித்து நின்றன. அதுபற்றி 'எழும்' என்பதற்கு 'சேர்' என்பது பொருத்தமானசொல் அன்று. 'பொருள் சேர் புகழ்' என்பதற்கு 'மெய்ம்மைசேர்ந்த புகழ்' என்றுரைக்குங்கால், இறைவனுக்குப் பொய்ம்மை சேர்ந்த புகழ் உண்டா? என்ற வினாவாவது, மாந்தர் புகழெல்லாம் பொய்ப்புகழா? என்ற வினாவாவது எழுகின்றது. அதற்குத் தக்கவிடை யிறுத்தல் இயலாதகாரியம். இவ்வாறு பொருத்தமற்ற பொருளைத் தரும் குறளை நம்மெய்ப்பாவலர் கூறினரென்றல் அவரை நிந்தித்தலேயாகும்.

ஆறுங்குறள்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

இஃது ஐந்தாங்குறளினும் பொருட்பொருத்தமற்ற குறள்.

இதற்குப் பரிமேலழகருரை :—மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்தவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

மணக்குடவருரை:—(மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும்ஐம்) பொறிகளின் வழியாக வரும் (ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும்) ஐந்தின்கண்ணும் செல்லும் மன நெகிழ்ச்சியை அடக்கினனது பொய்யற்ற ஒழுக்கநெறியில் நின்றார் நெடிது வாழ்வார்.

நச்சருரை:—(ஐம்) பொறிகளின் வழியாக நுகரப்படும் ஐம் புலன்களையும் வென்றனது பொய் நீங்கிய ஒழுக்க நெறியில் நிலையாக நின்றார் (இகத்திலும் பரத்திலும்) நெடுங்காலம் வாழ்வார்.

தாமத்தருரை:—உடம்பு, வாய், கண், காது, மூக்கு என்று சொல்லப்பட்ட ஐந்து) பொறிகளை வழியாகவுடைய ஐந்து ஆசை களையும் அறுத்தவன் (சொன்ன)குற்றமில்லாத நேர் நெறியிலே வழுவாமல் நடந்தவர்கள் (ஒருகாலமும் அழிவில்லாமல் இருக்கிற மோட்சத்திலே) எக்காலமும் வாழ்வார்கள்.

தருமருரை:—(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்புலன்களை நுகர்தற்கு) வழிக்கருவியாகிய (மெய், வாய், கண், மூக்கு, செவி என்கின்ற) ஐம்பொறிகளையும் அகத்தடக்கிய இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின் கண் வழிபட்டு நின்றவர் (முத்தராய்) நெடுங்காலம் வாழ்வர்.

அரசஞ்சண்முகனருரை:—(மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்) பொறிவாயில்கள் இல்லாமலே ஐம்புலன் அவாக்களை யும் நீத்தவனது பொய் நீங்கிய ஒழுக்க நெறியின்கண் நின்றவர் கள் வீட்டுலகத்தின்கண் நீடுவாழ்வார்.

பொறிவாயில்கள் இல்லாத மெய்ப்பொருளைப் பொறிவா யில்கள்பற்றி எழாநின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களின் அவாக்களையும் நீத்தவன் என்பது எவ்வளவு பொருத்தமின்மை என்பதை யான் எடுத்துக் கூற வேண்டுவதில்லை. அரசஞ்சண்முகனர் அப்பொருத்த மின்மை யை உணர்ந்தே பொறிவாயில்கள் இல்லாமலே ஐம்புலன் அவாக்களையும் நீத்தவன் என்று உரைத்தனர். அவ்வுரையும்

பொருத்தம் அன்று, ஐம்பொறிவாயில்கள் இல்லாதானுக்கு ஐம்புலவேட்கை உண்டாகாதாகலான்.

பொய்தீர் ஒழுக்கம் என்றதனால் பொய்தீராத ஒழுக்கம் ஒன்று உண்டோ? என்னும் ஒருவினா எழுகின்றது. தீயொழுக்கம், கூடாவொழுக்கம் என நம் திருவள்ளுவர் கூறியிருக்கின்றனரேயன்றி, யாண்டும் பொய்தீரா ஒழுக்கம் என்று கூறிற்றிலர்.

ஒழுக்கம் என்பதன்பொருள் 'ஒழுகுதல்' என்பதுதானே. அவ்வாறிருக்கவும், அதனுடன் 'நெறி' என்பதனைச் சேர்த்து வாளா கூறுவானேன்? அன்றியும் 'நெறிசென்றார்' என்று கூறுவதுதானே பெருவழக்கு? அதனைவிடுத்து 'நெறிநின்றார்' என்று கூறியதில் யாது சிறப்புளது? எங்கு நீடுவாழ்வார் என்று கூறாது நீடுவாழ்வார் என்றுமட்டும் கூறியதனால், இந்நிலமிசை என்று கொள்வதா? 'அல்லது எந்நிலங்களினும் மிக்க எழுநிலமவற்றின் மேலாம் நன்னில' மிசை என்று கொள்வதா? 'நீடு' என்ற சொல்லின் பொருந்தாத்தன்மையையும், 'நீடு'வாழ் என்று ஆறுஞ்சீரைப் பிரிக்கும்படியாகப் பா யாத்திருத்தலின் சிறப்பின்மையையும் மூன்றாங்குறளின் கீழ்க் கூறியுள்ளேன். அவற்றை ஆண்டுக் கண்டுகொள்க.

மேற்கூறியாங்குப் பலவாறு பொருட்பொருத்தமின்மையும் சொற்பொருத்தமின்மையும் நிறைந்துள்ள இக்குறளினை நம் தெய்வப்புலவர் இயற்றினரென்றல் அவரை அவமதித்தலேயன்றி வேறன்று.

பொறிவாயி லைந்தவித்தான் என்று துறவியைக் கூறுதல் வழக்கேயன்றி மெய்ப்பொருளைக் கூறுதல் வழக்கன்று. அதனால் இக்குறளும் துறவியை இறைவனாக வணங்கும் ஒரு மதத்தினது கூற்றென்றே கொள்க.

உடலியலும் உடல்நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
தலைமையாசிரியர், குட்வாயில்.

(முற்றொடர்ச்சி 360-வது பக்கம்.)

I. VIII. மல்லாந்து நேராகப் படுத்துக் கைகளைத் தலையை ஒட்டிப் பின்னே நீட்டு. வலது காலை வளைக்காது கூடியவரை உயர்த்து, பின் கீழே கொண்டுவா. பின் இடதுகாலை இவ்வாறே செய், பின் இரண்டு கால்களையும் 'ட' ப்பட உயர்த்தித் தாழ்த்து. [வலதுகாலை ஆறுமுறை, இடதுகாலை ஆறுமுறை, இரண்டையும் சேர்த்து ஆறுமுறை; உயர்த்தும்போது இழு, தாழ்த்தும் போதுவிடு. கால்களுக்கும் வயிற்றுறுப்புகளுக்கும் பயிற்சி].

IX. காலை அகற்றி, கை விரல்களை மடக்கிக் கைகளை இருபுறங்களிலும் நேராக நீட்டி நில். உடலை இடுப்பிற்குமேல் இடதுபுறமாகத் திருகி, மூஞ்சியை இடதுபுறந்திருப்பி வலக்கை நேர் முன்னாகவும் இடக்கை பின்னாகவும் ஒழுங்காக இருக்கும்படி கொண்டு வா. அப்படியே முன்னாகவுங் கீழேயுங் குனிந்து வலக்கை கூடியவரை நிலத்தைத் தொடுவதுபோலவும் இடக்கை அதற்கு நேர் மேலும் இருக்கும்படிசெய். பின் அப்படியே நிமிர்ந்து உடலைத்திருகி இடக்கை முன்னும் வலக்கை பின்னும் வரும்படிசெய். முன்போல் குனிந்து நிமிர். [வலக்கை ஐந்து முறை இடக்கை ஐந்து முறை கீழே போய் வரவேண்டும். குனியும்போது விடு, நிமிரும்போதுந் திருகும்போதும் இழு. முள்ளந் தண்டிற்கும் வயிற்றினுள்ளுறுப்புகளுக்கும் பயிற்சி.]

X. நிலத்தில் உட்கார்ந்து காலை முழங்கால் சிறிது வளைந்திருக்கும்படி நீட்டி அதன் (கால்) விரல்களைப் பெட்டியடிக்குள் விடு. கைகளை இடுப்பில் வைத்துக்கொண்டுமல்லாந்து மெதுவாய்ப் படு; பின் எழுந்திரு [பத்து முறைசெய். படுக்கும்போது விடு;

எழுந்திருக்கும்போது இழு. முதுகுத் தசைகளுக்குப் பயிற்சி. கூனல் குறையும்.]

XI. கால்களைச் சேர்த்துக் கைகளை இடுப்பின்மேல் வைத்துக் கொண்டு நேராக நில். வலதுகாலை வலதுபுறமாகக் [கூடிய வரை பெயர்த்து வைத்து இடது காலை நேராக நீட்டி உடலை வலப்புறமாகக் கூடியவரை வளை. பின் திரும்பி வந்து இடப் புறமாகச்செய், [புறத்திற்குப் பத்துமுறைச் செய். வளைக்கும் பொழுது விடு, நிமிரும்பொழுது இழு. இடுப்பிற்கும் விலாப் புறத் தசைகளுக்கும் முள்ளந்தண்டிற்கும் பயிற்சி.]

XII. வயிற்றுத்தசை, நெஞ்சுத்தசை, கைத்தசை, கால் தசை, கழுத்துத்தசை, விலாப்புறத்தசை முதலியவைகளைப் பிசைந்து அமுக்கு.

XIII. நேராக நின்று உள்ளங்கைகள் நிலத்தை நோக்கும்படி கைகளை முன்னால் நீட்டு. இரு கைகளையுஞ் சேர்க்காது இடுப்பிற்குமேல் உடலைத்திருகி வலப்புறமாய்க் கைகளைக்கூடிய வரை கொண்டுபோ. பின் திரும்பிவந்து இடப்புறமாகக் கொண்டுபோ. (புறம் ஒன்றிற்கு ஐந்து முறை கொண்டுபோ. திருகும்போது விடு, திரும்பும்போது இழு. முண்டத் தசை களுக்கெல்லாம் பயிற்சி.)

XIV. முன்போல் நின்று உள்ளங்கைகள் ஒன்றையொன்று தொடும்படி கைகளை முன்னே நீட்டு. கைகளை விரைவுடன் விரித்து முதுகின் பின் கொண்டுவந்து தொடும்படிசெய். பழக்கத்தால்தான் இவ்வாறு தொடமுடியும். [பத்துமுறை செய். கைகள் முன் வரும்போது இழு; பின் போம்போது விடு. நெஞ்சுத் தசைகளுக்குப் பயிற்சி].

ஆ

ஆண்டு ஆகஆக முள்ளந்தண்டு விறைத்துக் கூனடைந்து வளைந்து கொடுக்காது. அவ் விறைப்பை நீக்கத்தக்க பயிற்சி களாவன :—

XV. மல்லாந்து படுத்து முழங்காலை மடக்கித்தொடையை வயிற்றின்மேல் வை. கையைப் புறங்களில் நீட்டு. முழங்கால்கள் வலப்புறமாகவும் அடிகள் இடப்புறமாகவும் போகும்படி திருப்பு. பின் திரும்பிவந்து இடப்புறமாகத் திருப்பு. [பத்து முறை செய். திருப்பும்போது விடு: திரும்பும்போது இழு].

XVI. சப்பளங்கோட்டி உட்காரு. பின்னால் வளைந்து தலையும் தோளும் மட்டும் நிலத்தைத் தொடும்படி முதுகை வளைத்துப்படு. பின் தோள்களை வளைத்து இடத்தோளை வலப்புறங் கொண்டுவா. திரும்பிவந்து வலத்தோளை இடப்புறங் கொண்டுவா [முன்போல்]

XVII. கால்களை நீட்டி அகற்றி நிலத்தில் உட்காரு. கைவிரல்களைத் தலையின் பின் பின்னிக்கொண்டு கைகளை இரு புறமும் நேராக இருக்கும்படி மடக்கு. அப்படியே தோள்களை வளைத்து இடது முழங்கையால் வலது முழங்காலைத் தொட முயல். திரும்பிவந்து அவ்வாறே வலது முழங்கையால் இடது முழங்காலைத் தொட முயல் [முன்போல்]

XVIII. ஒரு தடியை இருகைகளும் மூன்றடி விலகியிருக்கும் படிபிடித்துத் தலைக்குமேல் நீட்டிக் கால்களைச் சேர்த்து நில். பின் வலதுகாலை ஒரு அடி அகற்றி இடது கையால் வலது கையை மடக்காமலே தடிவழியாகத் தள்ளிக்கொண்டே தடியை வலமாகவும், பின்னும் திருப்பு. திரும்பிவந்து இடதுபுறந்தள்ளு. [முன்போல்]

இவையன்றி முன் III, IV, XI. ம் பயிற்சிகளும் முள்ளந்தண்டை வளையும்படி செய்யக்கூடியனவே.

இ

எருச் சிக்கலையும் பசியாமையையும் நீக்கத்தகுந்த பயிற்சிகளாவன :-

(1) முன் பத்தாவது பயிற்சியைப்போல், கைகளைப் புறங்களில் நீட்டிக்கொண்டு செய்.

(2) போன பயிற்சியைப்போல், ஆனல், கால்களை நன்ருய் அகற்றி உடலைத்திருகி மாற்றி மாற்றி வலதுகையால் இடது காலையும் எதிர் எதிராகவும் குறுக்காகத் தொடு.

(3) முன் எட்டாவது பயிற்சியின் மூன்ருவது பிரிவைச் செய். (இருகால்களையும் தூக்கி நீட்டு)

(4) மல்லாந்து படுத்து இருகால்களையும் குதிகள் நிலத்தில்படாது நிலத்தோடு உதை.

(5) முன் நாலாவது பயிற்சியைக் காலைச் சேர்த்துச் செய்.

(6) போன பயிற்சியையே காலை அகற்றி வைத்து உடலை மாற்றி மாற்றி ஒவ்வொருகாலின் புறமாக வளை.

(7) முன் ஆருவது (vi) பயிற்சியைச் செய்

(8) முன் ஒன்பதாவது (ix) பயிற்சியைச் செய்.

ஏ

தூக்கம் வராததற்குப் படுக்கைப் பயிற்சிகள்.

குறிப்பு:—தூக்கம் சிலவேளை கவலை, வருத்தம், மகிழ்ச்சி முதலிய உள்ள நிலையாலும், தசைகள் முறுக்கேறியிருப்பதினுலும், வராமலிருக்கக்கூடும். பிற்கண்ட பயிற்சிகள் உள்ளத்தைக் கவலையினின்றும் நீக்கி உடலில் நினைப்பூட்டி, தசைகளைத் தளர்த்தித் தூக்கம் உண்டாக்கும். இவைகளைக் கவலையுடன் வருந்தி முயன்று செய்தால் தசைகளின் முறுக்குமிருந்து இயல்பாய் வரக்கூடிய தூக்கமும் வராது. ஆதலின் இவைகளை விளையாட்டாக மெதுவாகச் செய்யவேண்டும்.

(1) மல்லாந்து படுத்துக் கைகளைத் தலையோடு ஒட்டியிருக்கும்படி பின்னல் நீட்டு. பின் மெல்ல மூச்சை உள்ளிழுத்துக்கொண்டே உடலை வருத்தாது மிக நீண்டதாகச் செய்வதுபோல் நீட்டி தசைகளைத் தளர்த்திவிடு [3, 4 முறை செய்.]

(2) மல்லாந்து படுத்துக் காலைச் சேர்த்து, கைகளை உடலோடு வைத்துக்கொண்டே ஒவ்வொரு காலாக நீட்டி நீட்டித் தளர்த்து [ஒவ்வொரு காலையும் 12 முறை நீட்டு]

(3) மல்லாந்து படுத்து முழங்காலை மடக்கிக் குதிகளை உடலோடு ஒட்டித் தரையில் படச்செய். பின் உடலின் நிறை தோள்கள், அடிகளின்மேல் உறைக்கும்படி மெல்ல இரண்டொரு விரற்கிடை கிளப்பு. பின் கீழேபடும்படி செய். [3, 4 முறை]

(4) மல்லாந்து காலை நீட்டிப்படுத்து மூச்சை இழுத்துக் கொண்டே மெல்லக் கையை உயர்த்து. பின் மூச்சை அடக்காமல் விட்டுக்கொண்டே கையைக் கீழேகொண்டுவா. [இவ்வாறு 4, 5 தடவைப்பொழுது செய்.]

ஐ

மீப் பளுவைக் குறைக்கும் பயிற்சிகள் :—

குறிப்பு :—ஒருவனுடைய நிறை அவன் உயரத்தையும், ஆண்டையும் பொறுத்திருக்கிறது. ஆண்டிற்கும் உயரத்திற்கும் இருக்க வேண்டிய நேர்நிறை பின்வரும் பட்டியலில் (சேர்க்கை iii) குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் கீழ் 10 அல்லது 20 பவுண்டு குறைந்திருப்போரே நீடுவாழ்வோராவர். அதற்குமேலிருப்போருக்கெல்லாம் குருதியேற்றமும், சமிக்கும் உறுப்புகளும், மூச்சுறுப்புகளும் வருந்தி உழைக்கவேண்டியதாயிருப்பதால் அவர்கள் சடுதியில் இறக்க நேரிடுகிறது. ஆதலின் சராசரி நிறையைவிட 30 பவுண்டு குறைந்திருத்தல் கூட உடலிற்கு நன்றே. எனவே மீப் பளு (Over Weight) வுடையோர் தக்க பயிற்சிகளால் பளுவைக் குறைத்துக்கொள்ளல் வேண்டும். அவையாவன :—

(1) முன் நாலாவது பயிற்சியைச் செய்.

(2) முன் ஆறுவது பயிற்சியைச் செய்.

(3) கைகளை மடக்கித் தோள்மீது வை. பின் மேலே

முன்னால், இருபுறமும், கீழே நீட்டி நீட்டி முதலிடத்திற்குக் கொண்டுவா. நீட்டும்போது உதரவுடன் நீட்டு.

(4) கைகளைத் தொங்கவிடு. தலையை வலப்புறந் திருப்பிக்கொண்டே வலது கையைத் தலைக்குமேல் தூக்கு. பின் வலது கையைத் தாழ்த்திக்கொண்டே, தலையை இடப்புறம் திருப்பிக்கொண்டே இடது கையைத் தூக்கு. இவ்வாறு மாற்றி மாற்றிச் செய்.

(5) முன் பதினொலாவது பயிற்சியைச் செய்.

(6) குதிகால்களைச் சேர்த்து நில். வலதுகாலை வலப்புறமாக நீட்டியபடி கூடியவரை உயர்த்து; பின் காலைச்சேர்; இடதுகாலை அவ்வாறே செய்.

(7) முன்போல் நின்று வலதுகாலை மடக்கிக் கால்விரல்கள் நிலத்தை நோக்கும்படி விரைவாய் உயர்த்து. பின் கீழே கொண்டுவா. பின் இடதுகாலை அவ்வாறே தூக்கித்தாழ்த்து.

(8) முன்போல் நின்று வலது கையைத் தலைக்குநேராய் உயர்த்து; உடலை வளைத்து விரல்களால் நிலத்தைத்தொடு. அதே பொழுதில் இடது காலைப் பின்னால் எவ்வளவு உயர்த்தக் கூடுமோ அவ்வளவு உயர்த்து. பின்நிமிர். இவ்வாறே இடது கையை உயர்த்தி வளை. இப்பயிற்சி அழகு, சோடிமைகளை (balance) உண்டாக்கும்.

இப்பயிற்சிகளன்றிப் பிற்கண்ட நற்பழக்கங்களும் நிறையைக் குறைக்கப் பெரும் பயன்படும்:-(1) உண்ணும்பொழுதும் அதன் பின் ஒருமணி வரைக்கும் நீர் குடிக்காதே. இதனால் சமித்தல் நன்றாகிறது. [சமித்தல் நன்றாயில்லாதவர்களுக்கே உடற் பளு மிகுகிறதெனின் நீங்கள் வியப்புறுவீர்கள். ஆனால் அதுதான் உண்மையாகும்] இவ்வாறு நீரை உண்ணும்பொழுது குடிக்காததால் சமித்தல் நன்றாக, உடலில் கொழுப்புவைத்தல் குறைவதுடன் 20, 30 நாளில் கண்விளக்கமடைந்து, நிறம் சிவந்து உடலன்றி உள்ளமும் நலமடைகின்றது. உண்ட ஒருமணிக்குப் பிறகு 2 சேர் நீருக்குக்குறையாது ஒருநாளில் ஒரு குவார்ட்

நீரைப் பருகு. (2) இடுப்பின்கீழுள்ள தசைகளைக் குறைக்க ஒரு எலுமிச்சம்பழச் சாற்றை நீருடன் கலந்து இரு பெரிய சாப்பாட்டிற்கு அரைமணிக்குமுன் குடி. (3) வெந்நீரில் முழுகு. சாப்பிட்டுப் படுக்குமுன் தக்க பளுக்குன்றக்கும் உப்புக்கள் கரைத்த சூடான நீரில் முழுகி ஒரு குவளை சூடான எலுமிச்சம் பழச் சாற்றுநீர்குடி. இவ்வாறெல்லாம் செய்வதை விட்டுப் பட்டினியுற்றும், குறைந்த, சத்தில்லா உணவை உண்டும் சதையைக் குறைத்தாலுங்கூட, இவைகளை விட்டபின் முன்னிலும் மிகுதியான பளுவுண்டாகிறது.

முன்கூனலை நீக்கத்தக்க பயிற்சிகள்:—

1. கயிறுதாவல். ஒரு கயிற்றின் இருமுனைகளையும் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு குதித்துக் குதித்து காலிற்கு கீழால் செலுத்தி உடலைச் சுற்றச்செய்தல்.

2. கைகளை உடலோடொட்டி வைத்துப் படுத்துக்கொண்டு நேரே தலையை ஒட்டி உயர்த்திப் பின்னால் நீட்டல்; பின் முன்னிருந்த விடத்திற்குக் கொண்டுபோதல்.

ஓ

பெண்களின் அழகை மிகச்செய்யும் பயிற்சிகள்:—

கயிறுதாவல், நீந்தல், ஆழ்ந்த மூச்சுப்பயிற்சி, கூத்தாடல் முதலியனவாம்.

சேர்க்கை II.

பயிற்சி செய்துவருவோர் திங்களொருமுறை உடலில் அளந்து பார்த்துக்கொள்ள வேண்டிய இடங்கள்.

1. உயரம்
2. நிறை
3. கழுத்து
4. முண்டா (தோள்) (கையை நீட்டி)*

* இதன் அளவன்றி 5, 6, 7, 12, 13, 14ல் உள்ள அளவுகளையும் வலது கை, காலின் பங்குகளை அளந்தால் போதும். வேண்டுமானால் இடது, வலது கை கால்களைத் தனித்தனி அளந்துங் கொள்ளலாம்.

5. முண்டா (கையை மடக்கி)
6. முழங்கையின் கீழ் (கை நீட்டி)
7. மணிக்கட்டு
8. மார்பு (மூச்சை நன்றாய் இழுத்து)
9. கை (கை கை விட்டு)
10. தொந்தி
11. இடுப்பு
12. தொடை
13. முழங்கால்
14. கெண்டைக்கால் (Calf)
15. மணிக்கட்டு

சேர்க்கை III.

உடலிற்கு வேண்டிய பயிற்சியின் அளவு :—

(1) சராசரி மகனுக்கு நாள் ஒன்றிற்கு 250 முதல் 300 டன்னை ஒரு அடி தூக்குவதற்கு ஒப்பான பயிற்சி தேவை ; 400 டன் பயிற்சி சலிக்கக் கூடியதாகும்.

(2) மட்டமான சாலையில் 20 மைல் நடப்பது 354 டன் பயிற்சிக்கு ஒப்பாம்.

(3) .... 10 மைல் 60 பவுண்டு நிறையுள்ள பொருளைத் தூக்கிக்கொண்டு நடப்பது 248 டன் பயிற்சிக்கு ஒப்பாம்.

(4) மணிக்கு 3 மைல் விழுக்காடு நடக்கும் ஒருவன் தன் நிறையை அவன் நடந்த தொலையில் $\frac{1}{20.6}$ பங்கு உயரம் தூக்கியதற்கொப்பான பயிற்சி செய்கிறான் ; 4 மைல் விழுக்காடு நடந்தால் $\frac{1}{16.75}$ பங்கு உயரமும், 5 மைல் விழுக்காடு நடந்தால் $\frac{1}{14.1}$ பங்கு உயரமும் தன் உடல் நிறையைத் தூக்கியதற்கொப்பாம். இதைக் கணக்கிடத்தக்க சுருக்கமாவது (Formula) :— $\frac{(\text{நி} + \text{நி}')\text{தொ}}{2240} \times \text{ப}$. [ஈண்டு நி = அவன் உடல் நிறை; நி' = அவன் தூக்கிச் செல்லும் நிறை ; தொ = அவன் போகும்

தொலை; 2240 பவுண்டு = ஒருடன்; ப என்பது இவற்றைப் பெருக்கும் பங்காம்]

(5) ஒரு பவுண்டு நிறையை 40·4 அங்குலம் உயரம் கிளப்புவதால் ஒரு சூட்டளவு (calory) சூடு உண்டாகிறது. ஒரு டன் .... 2000 .... நாள் ஒன்றிற்கு உணவிலிருந்து உண்டாகவேண்டிய சூடு 2000 சூட்டளவேயாகும். (தொடரும்.)

தமிழ் நிகழ்ச்சிகள் 1.

சென்னைக் கல்வியமைச்சர்

திருவாளர் திவான்பகதூர் கனம்

S. குமாரசாமி இரட்டியார் B. A., B. L., M. L. C.

அவர்கள்

இச்சங்கக் கல்லூரிக்கு வந்தருளியபோது

சங்கத்தார் கூறிய வரவேற்பு வாழ்த்துரை.

கனம்தங்கிய ஐயன்மீர்!

உலகத்தே ஆங்காங்கே நடைபெற்றுவரும் பொது நாடக மேடைகள் போலாது, பார்ப்போர்க்கன்றி நடிக்கப் புகுந்தோர்க்கே, தாம் மேற்கொண்டு நடாத்தி முடிக்கவிருக்கும் நடிப்பின் தன்மைகளும், அவற்றின் பயனும் கால எல்லையும் இவைபோன்ற பிறவும் அறியலாகாத பெருவியப்பு வாய்ந்ததாய், எண்ணிறந்தோர் வரையறையின்றி வந்தும் போயும் தத்தம் மனம் போனவாறெல்லாம் நடித்தேகும் இயல்பினதாய் உள்ள இவ்வுலகியல் நாடக மேடையில், அன்பரீர்! தம்மைக் காண்பாரும், தம்முரையைக் கேட்பாரும் தம்மை அறிவாரும்

இலராய், தமக்கும் பிறர்க்கும் ஒரு சிறு பயனும் செய்யாராய், வறிது கழிந்தோர் விண்மீனினும், கடல் மணலினும் மிகப் பலராவர். ஆயினும், தாம்பிறந்த குடிக்கும் நாட்டிற்கும் பெரும் புகழ் விளைக்கும் அருஞ்செயல் புரிந்தார், புரிவார்-பண்டும்-இன்றும் மிகச்சிலராவது இல்லாமலில்லை. இத்தகைய சிறப்பினருள் ஒருவராகிய நீங்கள்,

‘ தலம்படைத்தோன்
கண்ட குலத்திற் கருதின் இரட்டியாம்
பண்ட குலத்தின் பயனானேன் ’— என்று சிவப்பிரகாசச் செம்மலார் திருவாய் மலர்ந்தருளியபடி, சிறந்தோர் இரட்டியார் குலத்தின் சீரெலாம் திரட்டிவைத்தனையராகி, அக்குலத்திற்குப் பெரும்புகழ் தந்து விளங்குவதோடு,

உலக மெலாமுண் டுமிழ்ந்தும் புரந்தும்
நிலவுதிரு மாலென்ன நீண்ட—அலைகடலைத்
தன்னகஞ்சேர் கல்வித் தனிக்கடலோ டுட்கொண்டு
துன்னும் பரமனைநேர் சொற்பெற்றே—மன்னியசீர்
மிக்கவிந் தம்மடக்கி மேமுனியைத் தன்சிறுகு
கைக்கு ளடக்குங் கவின்மலையாய்ப்—புக்கவிளந்
தென்றல் தவழ்ந்திடத் தேனருவி தான்பாய
ஈன்றாழ் இடம்பெறுன் எமாப்ப—என்றென்றும்
பொங்கி வழிநிலவாம் புன்னகைசே ரின்றமிழ்த்தாய்
தங்கும் தனியில்லாய்த் தாரணிகள்—எங்கும்
வதியும் எழிலெல்லாம் வாய்ந்திடலால் அம்ம
பொதியில் எனக்கூறும் பொற்பு—எனப் புகழ்பெறும் பொதிய மலையினையும் அம்மலைமங்கையின் திருவமுதென ஓடிவரும் பொருனையாற்றினையும் கொண்டு பழமை பெருமைகளாற் சிறந்த நெல்வேலிப் பதிக்குப் பல்வேலிகண்டு பாதுகாப்பதெனப் பல்வகை நற்றொண்டுகளைச் செய்யும் தலைவனாகி, அப்பதிக்குப் பெருஞ்சீர் தந்து விளங்குகின்றீர்கள்.

அருந்திறல் அன்பரீர் !

நீங்கள் மேற்கூறியாங்குக் குலத்தினால் இரட்டியாதல் போலவே, நெல்லைப்பதி மக்கட் பரப்பினரால் மாநாட்டாண்

மைக் கழக உறுப்பினராக, தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற காலம், சென்னைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற காலம், அவ்வக்கழகங்களில் மக்கட் பரப்பிற்கும் அரசியலார்க்கும் மனவேறுபாடுறாமற் செய்துவரும் நடுநிலை பொருந்திய தொண்டுகள் ஆகிய யாவும் உங்கட்கு இரட்டி இரட்டியாக அமைந்துள்ளதும் பெருவியப்பாக வுள்ளது! ஏன்? இவற்றிற்கெல்லாம் காரணமாகிய தமிழ் ஆங்கிலமாகிய இருமொழிப் புலமைகளையும், அவ்விரு மொழியிலும் அருமையாக அமைந்த பேசுந்திறமை, எழுதும் திறமைகளையும் இங்கு இவ்விரட்டிகளில் இணைத்துக்கொள்ள வேண்டுமன்றோ! இச் சிறப்புகளெல்லாம் இதுகாறும் மேவிய இரட்டிகள்; இறைவன் திருவருளால், இனி, எய்தவிருப்பன எத்துணையோ பல இரட்டிகள்!

கல்விநெறிக்கோர் கண்ணெனச் சிறந்தீர்!

உலக முன்னேற்றத்தினை யொட்டி, இந்நாடும் முன்னேற வேண்டி அரும்பாடுகள் பட்டுவரும் நம் நாட்டினர் முயற்சிகளுக்கெல்லாம், அடிப்படையாக நின்று உதவிபுரிய வல்லதும், அம் முயற்சிகள் பயனுறுங்கால் அப்பயனைப் பாதுகாத்துக் கொள்ள வல்லதும் கல்வியே யாகும். இக்கல்வி நமது நாட்டில் எத்துணைப் பிற்போக்கான நிலையில் உள்ளதெனற்கு நம்நாட்டில் நூற்றுக்கு அறுவரே கல்வி கற்றவர் என்னும் திட்டக்கணக்கே சான்று பகரும். இந்த ஆறு நூறு என்பன-ஆறிலும் நூறிலும் எனக் கூறுவதுபோல-மிகப்பெருந் தொகைக்கும் மிகச் சிறு தொகைக்கும் எடுத்துக் காட்டும் வழக்குச்சொல்லீடு. இங்ஙனம் மிகக்கீழான நிலையில் நம்நாட்டின் கல்விநிலை நிற்குமாயின், அத்துறைக்குத் தலைவராகிய உங்கட்கும் உங்கள் உதவியாளர்கட்கும் கவலையும் பொறுப்பும் உழைப்பும் நாளும் நாளும் மிகுந்து வருவதில் வியப்பு ஒன்று மின்று. இங்ஙனம் மிக்க பொறுப்பு வாய்ந்ததோர் துறையில், தொண்டு செய்ய முன்வந்து, உங்கட்குரிய பற்பல் வேலைகட்கிடையே, ஆங்காங்குச் சென்று எம் போன்றவர்களை யெல்லாம் ஊக்கிவரும் உங்கட்கு, எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்தி உங்கள் நலங்குறித்துத் திருவருளைச் சிந்தித்திருத்தலே எங்கள் கடமையாகும்.

ஐயன்மீர் !

எங்கட்குக் கிடைத்த இந்த அருமையான சமயத்தில், எங்கள் பள்ளிக்கூடத்தின் நிலையினையும் இதற்குள்ள மனக்குறைகளையும் தங்களிடம் தெரிவித்துக் கொள்ளும் கடமையுடையவர்களாகின்றோம்.

அண்ணல் !

இப்பள்ளியினைப் புரந்துவரும் சங்கமானது, தமிழ் மொழி வளர்ச்சியொன்றே கருதியதோர் சங்கமாகும். ஆகவே, தனித் தமிழ்ப் பயிற்சியையே இது கருதுங் கடமையினது. என்றாலும் இந்நாட்டிலேயே திருத்தமான தாய்மொழிப் பயிற்சியுடைய பள்ளிக்கூடம் ஒன்றும் இல்லாமை கருதி, இச்சங்கம், பற்பல எதிர்ப்புகளுக்கிடையே, இப்போதுள்ள இப் பள்ளியினைத் தொடங்கி, நாளும் நாளும் சிறக்க நடாத்தி வருகின்றது. அரசியலார் நிலத்திற்கும் கட்டிடங்களுக்கும் தந்தநன்கொடைகள் போக, எத்துணையோ ஆயிர ரூபாய்களை இப்பள்ளிக்கூட நிகழ்ச்சிக்குச் சங்கம் அளித்திருக்கின்றது. ஒருபைகூட வருவாயின்றி, இதனைச் செவ்விதின் மேற்பார்வை செய்துவரும் இதன் மானேசர் முதலாயுள்ள அலுவலாளர்களைச் சங்கம் தந்துதவுகின்றது.

இத்தகைய பள்ளிகளை வைத்து நடாத்துங் கடமையினர் நாட்டாண்மை நகராண்மைக் கழகத்தினரும் அரசியலாருமே யாவர் அன்றோ? நாட்டாண்மை நகராண்மைக் கழகங்களின் போக்கினை ஈங்கு விரித்தல் வேண்டியதில்லை. கல்வி, கல்வியென்று கதறுவது வீணென்பதும், கல்வியின் உதவியில்லாமலே ஒருவர் எத்தகைய உயர்நிலைக்கும் வந்துவிடலாமென்பது தங்கள் சொந்த அனுபவமென்பதும் அவர்களிற் சிலர்கட்சி. அரசியலார், ஆராய்ச்சி அதிகாரிகளையமைத்து அவர்கள் வழியாக ஆண்டுதோறும் தேர்ச்சி செய்து திருத்தங்கள் காட்டி, வேண்டும் நன்கொடைகள் செய்துவருவதே இதுபோது கல்விப்பயிர்க்கு ஊற்றிவரும் உயிர்த் தண்ணீராகும். இந்த ஒரு முறையும், ஆங்காங்குள்ள ஆராய்ச்சித் தலைவர்களின் மனப்போக்குகளால்

ஒழுங்குபெற நடைபெறுவதில்லையெனலை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேம். இப் பள்ளிக்கூடமானது, ஆராய்ச்சியாளர்கள் சட்டதிட்ட மனப் போக்குகளின்படியெலாம் நடந்து வந்திருக்கின்றது, வருகின்றது. இப்பள்ளியினை ஆராய்ச்சி செய்து இதன் தனிச்சீரினைக் கண்டு மகிழ்ந்த முன்னை ஆராய்ச்சியாளர்கள், இதனை, இச்சில்லாவின் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு ஒரு மாதிரிப் பள்ளியாக்க விரும்பி, அதற்கெனச் சில திட்டங்கள் கூறினர். அவற்றின்படியே, விரிந்த பல கட்டிடங்களும் கைத்தொழிற் கல்விக்குரியதோர் தனிக் கட்டிடமும் மாணவர் விடுதியும் ஏற்பட்டன. மிக மிக விரிந்ததோர் விளையாட்டிடம் அண்மையில் வாங்கப்பட்டது. உயர் தகுதியாசிரியர்களே ஆசிரியர்களாக அமைக்கப் பெற்றனர். பற்பல வகையான பாடப் பயிற்சிப் பொருள்கள் ஈட்டப் பெற்றன. இங்ஙனமெல்லாம் இப்பள்ளியின் வளர்ச்சிகருதி, அரசியலார் தரவிருக்கும் நன்கொடைகளைப் பன்மடங்கு கடந்த, பல்லாயிர ரூபா பொருட் செலவுகள் செய்து அவர்கள் விருப்பினை நிறைவேற்றி வந்திருக்கின்றது. தொடக்கப் பள்ளிக்கூடங்கட்கு உரிய அமைப்புக்களில் இதன்கண் இல்லாதன பெரிதும் இல்லையென்றே கூறலாம். இப்பள்ளி, ஆண்பெண் இருபால் ஆசிரியர்களையும் மாணவன் மாணவிகளையும் கொண்டுள்ளது. ஆதிதிராவிடர் முதலான எல்லா வகுப்பு மாணவர்களையும் போதிய அளவு கட்டிடங்களையும் மிக விரிந்ததோர் விளையாட்டிடத்தினையும் கொண்டது. மாணவர் விடுதி கைத்தொழிற் கல்லூரிகட்செல்லாம் தக்க இடம்பெற்றுத் தொடங்குவதற்குச் சித்தமாகவுள்ளது. உள்ளூரில் பல பாகங்களிலிருந்தும் 5, 6, மைல் தூரமுள்ள வெளியூர்களிலிருந்தும் 400 மாணவர்கள் பயில்கின்றனர். 14 பிரிவுகளடங்கிய 8 வகுப்புக்களையும், உயர்தரத் தேர்ச்சிபெற்ற 15 ஆசிரியர்களையும் கொண்டுளது. இவ் வாசிரியர்களிற் பலர் தமிழ், சித்திரம், தேகப்பயிற்சி, இசை, வைத்தியம் முதலாயவற்றில் சிறந்த பயிற்சியுடையவர்கள். இசைப்பயிற்சிப் பாடமும் இங்கு நடைபெற்று வருகின்றது. இத்தகைய இப்பள்ளியில் இன்னும் வேண்டுவன இவை

யெனக் கூறும் ஆராய்ச்சியாளர் உளராயின், அவைகளை உடன் உடன் இயற்றிவைப்பதற்கு இச்சங்கம் சித்தமாகவுள்ளது.

இவ்வாறெல்லாமிருந்தும், இப்போதுள்ள ஆராய்ச்சித் தலைவர், இப்பள்ளியினிடத்து அருள் நோக்கம் இல்லாதவராகக் காணப்படுவது இச் சங்கத்திற்குப் பெரும் வியப்பினைத் தருகின்றது. உயர்தரப் பள்ளிக்கூடங்களும் அவற்றைச் சார்ந்த தொடக்கப் பள்ளிக்கூடங்களும் இருக்கும் நகரங்களில் தனிப் பட்ட தொடக்கப் பள்ளிக்கூடங்கட்குத்தக்க ஆதரவு அளிக்கலாகாது என்பது இப்போதுள்ளார் கொள்கையெனத் தெரிகின்றது. ஐயன்மீர்! ஆராய்ச்சித் துறைகளின் தலைவராவார்கட்கெல்லாம் ஒரு முடிந்த கொள்கையும் அவற்றிற் றவிராது அவரவர்கள் நடப்பதுமின்றேல் பள்ளிக்கூடங்களை வைத்து நடாத்துபவர்க்கு உண்டாம் இன்னல்களுக்கு அளவுமுண்டோ? இன்னொரு வியப்பு! இவ்வாறு ஒரு தலைவர் கொள்கை இதுவென வரையறுக்கப் பட்டாலும் ஒருவாறு அதன்படி நடத்தலாகும். ஒருவர்க்கே இடந்தோறும் காலந்தோறும் மனப்பான்மை வேறுபடுமாயின் என்செய்யவல்லேம். இப்போதுள்ள ஆராய்ச்சித் தலைவர் இப் பள்ளியினைப் பற்றியவரையில் இக்கொள்கையினை உடைய ராகின்றனரேயன்றி வேறிடங்களில் இக்கொள்கையினை மேற் கொள்வாராகக் காணப்பட்டிலர். திருவிடைமருதூர் என்ற ஊரில் உயர்தரப் பள்ளியொன்றிருக்கவும் அங்குள்ளதோர் தொடக்கப்பள்ளியினை ஆதரிக்கக் கருணைபூண்டிருப்பதே மேற் கூறியதற்குச் சான்றாகும். இப்பள்ளியினிடத்து இவர்க்கு அருள்நோக்கம் இல்லையெனற்கு ஒரு சான்று காட்டுகின்றோம்.

சென்றவாண்டில் (1929—30)

ஆசிரிய ஊதியம்	....	ரூ.	3634—13— 5
பணியாளர்	....	ரூ.	203—14—11
புராவிடன்ட் பண்டு	....	ரூ.	49— 5— 6
வரி	....	ரூ.	8— 0— 0
பழுதுபார்த்தல்	....	ரூ.	4— 4— 6
சாதல்வார்	....	ரூ.	85—15— 9

மாணவர் சம்பள உதவி	....	ரூ.	65— 0— 0
பரிசு	....	ரூ.	28—10— 0
சுவடி நிலையம்	....	ரூ.	42—13— 6
விளையாட்டு	....	ரூ.	18— 2— 3
தோட்டம் ஆண்டுவிழா முதலியன	....	ரூ.	161— 4— 0
		ரூ.	4302—3—10

ஆக ரூ. 4302—3—10 செலவு செய்திருப்ப இவர்கள் நன்கொடையாகத் தந்துதவியது 4253—12—0 அன்றியும், கட்டிடம், மரச்சாமான்கள், அறிவுநூற் பொருள்கள் ஆகிய இவைகளை வாங்கியதில் சர்க்கார் உதவியதுபோகச் சங்கத்தாரால் செலவு செய்யப்பட்டது ரூ. 3218—6—4 ஆகும்.

இப்பள்ளியில் இவ்வாண்டில் (1930—31)

ஆசிரியர் ஊதியம்	....	3933— 8—1
பணியாளர்	....	231—13—6
Provident Fund எனும் பிடித்தம்	....	41— 1—6
வரி	....	8— 0—0
கடிதம் முதலிய சாதல்வார்	....	190—15—4
பழுது பார்த்தல்	....	30— 0—6
புதுக்கட்டிடம்	....	1200— 0—0
சில்லரை வகைகள்	....	56—11—0
	ஆக ரூ.	5692—1—11

ஆக ரூ. 5692—1—11 செலவாகி இருப்ப இவர்களால் நன்கொடைக்குரியதென ஒப்புக்கொண்டிருக்கும் தொகை 4300 ஆகும். எனவே, இக்கல்லூரியை நடத்தியதை முன்னிட்டு இச்சங்கத்திற் குரிய கைப்பொறுப்புத்தொகை ரூ. 1300 க்கு மேலும் ஆகின்றது. இவ்வாறிருக்க, இதனினும் குறைந்த தொகை வருமாறு 65%வீதம் சிபார்சுசெய்து, அத்தொகையினும் மிகுதியாகக் கொடுத்தால் சங்கம் ஊதியத்தை யடைகின்றது என்று கருதும் ஆராய்ச்சியாளரின் கருத்து எமக்குப் பெரிதும் வியப்பை விளைவிக்கின்றது.

பெருந்தகையீர் !

கல்லூரிகளுக்கு ஆகும் செலவைவிடக் கூடுதலாகத் தரலாகாதென்று வாதாடும் இவ்வாராய்ச்சியாளர், நடுக்காவேரியில் அமைந்துள்ள, 84 மாணவர்கட்கு 7 வகுப்புகளும் 5 ஆசிரியன்மார்களும் உள்ள மேரி மகாராணியார் கல்லூரிக்கு அதன் செலவு ரூ.1147. ஆக இருக்க ரூ. 1300க்குமேல்அளிக்கும்படியும், நாகூரில் 8-வகுப்புகளில் 256 மாணவர்கள் உள்ள ஒரு கல்லூரிக்கு ரூ. 1926 செலவழிந்திருக்க அதற்கு ரூ. 2923 தருமாறும், அதிவிராாமன் பட்டினத்திலுள்ள 30 மாணவர்கட்கு 3 ஆசிரியருள்ள ஒரு கல்லூரிக்கு 100 க்கு, 180 வீதம் அளிக்கவும் பரிந்து பேசி அரசியல் நன்கொடையைப் பெருமாறு செய்ததை நோக்கின், அக்கல்லூரிகளைப்போல் இக்கல்லூரியும் தம்மினத்தவர்களின் ஆளுகையில் இல்லாமையே மேற்கூறியதற்குக் காரணமாகும் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

பேரருட் பெரியீர் !

இவ்வாறு அரசியலாரின் அரும்பணிகள் பலவும் தன்னலமுற்ற ஒருசிலரால் இழுக்கடைகின்றன. ஒரு சிறு ஊதியமும் கருதாது நேர்மையான முறையில் கல்வி வளத்தினையே தன் நோக்கமாகக்கொண்டு தொண்டாற்றிவரும் இக்கல்லூரியின் சிறப்பினை உள்ளவாறுணர்ந்து அது மேன்மேற் பெருக மனங்கொள்ளாத ஆராய்ச்சியாளரின் மனப்பான்மையைத் தாங்கள் அறிந்து வேண்டுவன புரிய வேண்டுகின்றேம்.

கல்விப் பெருநெறியாள !

தாங்கள் தஞ்சைக்கு வந்த இதுபோது எங்களது எளிய வேண்டுகோட்கிணங்கி, எம்மிடைவந்து, எம் நிலையறிந்து, எம் தொண்டு முட்டின்றிப் பலநலம் பெற்று வளரத் தண்ணளி கொண்டுள்ள தாங்கள் எல்லாநலனும் பெற்று எம்போன்றார்க்கு உறுதுணையாகி உலகெலாம் இசைநிறீஇ பல்லாண்டு வாழ வழுத்துகின்றேம். தமிழ்த்தாய் வாழ்க.

இங்ஙனம்

6—4—31. த. வே. உமாமகேசுவரன்,

சங்கத்தலைவர்.

தமிழ் நிகழ்ச்சிகள் 2.

அண்ணாமலைநகர்,
14—3—31.

திருவாளர் பொழிற்றேண்டர் அவர்களுக்கு,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் ஆண்டுவிழா, இத்திங்கள் 12-ம் நாள் வியாழனன்று, மாலை ஐந்து மணிக்குப் பொத்தக நிலையக் கீழ்பால் பைம்புலத்தில் இனிதாக நடைபெற்றது. கலைக்கழகத் துணைவேந்தர் திருவாளர். ராவ்பகதூர். **S. E. ரங்கநாதன்** M.A., I.E.S., அவர்கள் அவ்வமயம் தலைமை வகித்தார்கள். பேரவையின் அமைச்சன் கு. அருணாசலனார் இவ்வவையின் ஆண்டு அறிக்கையைப் படித்தார். பின்னர், மயிலை ஸ்ரீராமகிருஷ்ண சங்கத் திருமடத்து உயர்திரு. சுவாமி அவிநாசானந்தா M. A., அவர்கள் வாழ்த்தியல் விரிவுரை கூறவந்தார், தமிழின் சிறப்பையும் சீரையும் செவ்வனே எடுத்துச் சொல்லி, தமிழைப்படிக்கும் பலவேறு முறைகளையும் பகன்ற பின்னர், 'கற்றதனால் ஆய பயனென்கொல்' கற்றதைப் பிறர் பயன்படும்படியான வழியில் கையாளா விட்டால்? என்று வினவி, தன் சொற்பெருக்கை முடித்தார். முடிவுரை கூற எழுந்த கலைக்கழகத் துணைவேந்தர், எல்லோரும் இதுவென்ன புதுமையென வியக்க, தேனினும் இனிய தமிழ் மொழியிலேயே, தமிழை வளர்ப்பதையே முதல் நோக்கமாகக் கொண்டது · **ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்** நிறுவின பல்கலைக் கழகம் என்றும், பண்டைக்காலத்தில் அகத்தியர் முதலிய முனிவராலும் துறவிகளாலும் போற்றப்பட்ட தமிழணங்கை இக்காலத்திலும் துறவிகளான சுவாமி விபுலானந்தஜி முதலியோர் போற்ற முன்வந்துள்ளார் என்றும் ஒரு அழகிய சிறு சொற்பொழிவு செய்தார்கள். சூரியன் மறையும் வேளையில் ஆண்டுவிழா இனிது நிறைவுற்றது.

S. K. கோவிந்தசாமி,
M. A.,

பிழை திருத்தம்.

பக்கம்	வரி.		
362	33	India.	Indica.
365	15	மலையடிப்பட்டியிலும்.	திருக்கோகர்ணம்.
367	24	சிறுகற்காக	சிறுகற்களாக
,,	34	(புதுக்கோட்டை குன்றாண்டார் கோயில் என்பதை நீக்கிப்படிக்க)	
368	33	Boge	Bose
,,	,,	Principls	Principles